# தமிழரசு

16-1-1991 ரூ.1



# Give your hair roots the same strength.




With Tampcol Herbal Hair Tonic your hair roots get a lot of additional energy.

Due to the special blend of pure Olive and Coconut Oils and the proven qualities of natural herbs. Like Henna, Hibiscus, Phylis, Aloe etc., Tampcol also stimulates hair growth and stops hair loss.

And your eyes get a cooling sensation you will appreciate.

Tampcol Herbal Hair Tonic. For that strength and vitality your hair needs.

**Tampcol**

HERBAL HAIR TONIC

(Government of Tamil Nadu Undertaking)

Has nature's gifts for great looking hair

Canco/945 DIPR



# பொங்கல் தரும் பூரிப்பு

## முதல்வர் கலைஞர்

வாழைமரம் கட்டி, வானுயர் கரும்பை நட்டு, இஞ்சியும் மஞ்சளும் மங்கல நாண் எனக் கொஞ்சிடும் புதுப்பானையின் கழுத்தில் குங்குமம் பூசி, எழிற் கோலங்கள் எங்கணுமிட்டு, மனை புதுக்கி, மாடு ஆடு போற்றி, மனித குலம் வாழ்விக்கும் மாணிக்க ஞாயிறை வாழ்த்திக் கொண்டாடப் போகிறோம் பொங்கல் விழா.

உழைப்பின் வெற்றி கண்டு உவகை கொள்ளும் விழா! விளைவின் செழிப்பு நோக்கி விழிகளில் ஒளி நிறையும் விழா! தத்தித் தவழும் மழலைச் செல்வம்-தங்கப் பதுமையென இல்லக் கிழத்தி - தாய் தந்தையர் - உடன் பிறப்பு - உற்றார் உறவினர் - வற்றாத அன்பு கொள் நண்பர் - இவருடன் குலவி மகிழ்ந்து குடும்பம் குடும்பமாகக் கொண்டாடும் இந்த விழாவில் குளிர் அருவி பாயும் நெஞ்சுடன் கூர்ந்து பார்க்கிறோம், விழாவுக்கெனத் தயாரித்த பானையில் வெண்சோறு பொங்கும் காட்சியினை! பச்சைக் குழந்தைகளின் கடை வாயில் ஒழுகும் பால்போல் அந்தப் பானையின் வாயில் பொங்கி வழியும் பால் கண்டு பூரிப்புக் கொள்கிறோம்!

## பொங்கல் வாழ்த்து

*அன்பு நெஞ்சங்களே! ...*

*வணக்கம்.*

*பொங்கல் புதுநாளில் 'தமிழரசு'*
*வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும்,*
*விளம்பரதாரர்களுக்கும்,*
*தமிழ்ப் பெருமக்களுக்கும்*
*பொங்கல் வாழ்த்தினைத்*
*தெரிவித்துக் கொள்கிறோம்.*

*-ஆசிரியர்.*

# இந்த இதழில்...


| | |
|---|---|
| இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா ... | 4 |
| தமிழ் வளர்ச்சியில் ஒரு புதுமலர்ச்சி —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன் ... | 9 |
| சித்த மருத்துவத்தில் நாடி ... | 12 |
| வள்ளுவர் வழியில் பாவேந்தர் ... | 14 |
| திருவள்ளுவர் சொல்லாட்சி மாட்சி —புலவர் கா.கோவிந்தன் ... | 17 |
| இந்தியக் கைவினைப் பொருட்கள் கலைவிழா ... | 22 |
| வேளாண்மை வளர்ச்சிப் பணிகள் ... | 26 |
| பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... | 29 |
| தென்னார்க்காடு .மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... | 33 |
| சென்னைக் குடிநீர் வாரியத்தின் சீரிய பணிகள் ... | 35 |
| போற்றி வளர்க்கப்பட வேண்டிய கால்நடை மருத்துவ அறிவியல் -மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... | 41 |
| அரசியலுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும் ... | 46 |



# தமிழரசு

**திருவள்ளுவர் ஆண்டு 2022**

**தைத் திங்கள் - 3**

**மலர்:21** **இதழ்:14**

**16-1-1991**


## பொங்கல் சிறப்பிதழ்



# செங்கதிர் வாழ்க!

## பாவேந்தர் பாரதிதாசன்

பொங்கற் புதுநாள் முகமலர்த்திப் பொன்னான
செங்கதிர்ச் செல்வன் திரைகடலின் மேலெழுந்தான்
எங்கட்குப் புத்துயிரும் நல்கிப் பெருவாழ்வு
தங்கப் புரிந்த தகைமையினை வாழ்த்துவமே!

மூடு பனிவிலக்கி மொய்த்த குளிர்விலக்கி
நாடு நினைத்தஎலாம் நன்கு தொழிற்படுத்தித்
தோடவிழ்த்துச் செம்பரிதி பொன்வெய்யில் தூவுகின்றான்
விடுமலி பொங்கல் விழாப்பாடி வாழ்த்துவமே!

சேற்றிற்செந் தாமரைபோல் செங்கதிர்க்க-ருங்கடலில்
தோற்றஞ்செய் தான்எங்கள் தோகையர்கள் நீராடி
மாற்றுப்பொன் னாடை மடிப்பு விரிந்துடுத்தே
ஊற்றியபாற் பொங்கல் உவந்துவந்து வாழ்த்துவமே!

அரும்பும் இளநகையார் அங்கங்கே செந்நெல்
கரும்பு கனிவாழை, தேன்நெய் தயிர்பால்
தரும்பயன்மேற் பொங்கும் தைப்பொங்கல் உண்ண
வரும்பரிதி நாம்பாடி வாயார வாழ்த்துவமே!

காடெல்லாம் நாடுநகர் வீடெல்லாம் வீட்டுமேல்
ஓடெல்லாம் பொன்னாக்கி ஆர்கலிமேல் உற்றகதிர்
ஆடலினால் பாடலினால் ஆர்த்தபெரும் பொங்கல்
கோடல் மகிழ்ச்சியினால் கூடிநாம் வாழ்த்துவமே!

(பொங்கல் வாழ்த்துக் குவியல் என்னும் நூலிலிருந்து)



# வள்ளுவரின் குறள்

—தந்தை பெரியார்

"அறிவினால் உய்த்துணர்ந்து, ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இணைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களைக் கொண்டு இயங்குகிறது வள்ளுவரின் குறள்.



"மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி ஊட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவே தான் எல்லா மக்களும், எல்லா மதத்தவரும், "எங்கள் குறள்" "எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்" என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

"மூடநம்பிக்கை யொழிந்து, அறிவு செம்மைப்பட திருக்குறள் செம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே 'திருக்குறள் கல்வி', அறிவு என்றாலே 'திருக்குறள் அறிவு' என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது."

# புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!

-பேரறிஞர் அண்ணா

தமிழ்நாட்டு மக்கள் எத்தனையோ பல பண்டிகைகளைக் கொண்டாடலாம்; ஆனால், பொங்கல் மட்டுமே குடும்பத்தில் உள்ள அனைவராலும் கொண்டாடப்படுகிற பண்டிகை. முதியோராயினும், இளைஞராயினும் ஏழை உழவராயினும் வசதி படைத்தோராயினும்



அனைவரும் கொண்டாடும் திருநாள் இது. இத்திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தரும் நாள். ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் ஒத்துழைப்பை வலியுறுத்தும் விழா பொங்கல் விழா!

நாம் எல்லோரும் உரிமையோடு பங்கேற்கும் ஒரு பெரும் திருநாளாகப் பொங்கல் நாள் திகழ்கிறது.

புதிய ஒளியோடு நாம் எல்லாம் ஒருங்கிணைந்திடும் ஒரு வாய்ப்பினைப் பொங்கல் விழா நல்கிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான ஒரு நிறைவான வாழ்வை நோக்கி நடைபோடுவதே நமது குறிக்கோள் ஆகும்!

உற்பத்தியைப் பெருக்கி விநியோக முறையைச் செம்மைப்படுத்தி அதன் மூலம் பொருளாதார நீதியெனும் குறிக்கோள் முழுமைபெறச் செய்யவேண்டும். சுரண்டலும், அடிமைத்தனமும் நீங்கி, வஞ்சகமும் ஏற்றத் தாழ்வுகளும் அகன்று, எல்லோரும் இன்புற்றிருக்கும் வண்ணம் புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!



# இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா

**செ**ன்னையில்- 40 நாடுகள் பங்குகொள்ளும் 22-வது இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா, சென்னையில் 10.1.91 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை **இணை** அமைச்சர் திரு-சுபோத்காந்த் சகாய் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு 'தமிழ்த் திரைப் பட வரலாறு' என்ற சிறப்பு மலரை வெளி யிட்டார். மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அதைப் பெற்றுக் கொண்டார்கள்.

மத்திய செய்தி ஒலிபரப்புக் கூடுதல் செயலாளர் வரதன்- திரைப்பட விழா இயக்குநர் தீபக் சந்த் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள்- விழாவில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு நினைவுப் பரிசுக்ள் வழங்கினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொன்னாடை அணிவித்தார்.

விழா நிகழ்ச்சிகளை நடிகை சுகாசினி தொகுத்து வழங்கினார். விழா முடிவில் செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

மாண்புமிகு செய்தி **தொழிலாளர் நல** அமைச்சர் திரு. கே.என்.நேரு, இந்தியத் திரைப்படக் கூட்ட மைப்பின் தலைவர் திரு. ஜி.பி.சிப்பி, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., மேதகு தமிழக ஆளுநர், திரு.சுர்ஜித்சிங் பர்னாலா, மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. சுபோத் காந்த் சகாய் ஆகியோர் உரையாற்றினர்.

நடிகை ஹேமமாலினி தீபம் எடுத்து வழங்க- அதைக் கொண்டு, விழா துவக்கத்திற்கு அடையாளமாக மாண்புமிகு தமிழக முதல்வர்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குத்து விளக் கேற்றி வைத்தார்.

அதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆங்கிலத்தில் ஆற்றிய சிறப்புரை விவரம் வருமாறு:

இந்தியாவின் இருபத்து இரண்டாவது உலகத் திரைப்பட விழாவைத் தமிழ்நாட்டின் தலைநகரில் இன்றைய தினம் துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். என்னை இந்த விழாவின் தலைமை விருந்தினராக அழைத்துக் கவுரவித்த மைக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

திரைப்படத் துறையினரோடு எனக்கு நீண்ட நெருக்கமான தொடர்புகள் உண்டு. எனவே இந்த விழாவைத் துவக்கி வைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் சுபோத்காந்த் சகாய் அவர்களையும், வெளிநாடுகளில் இருந்தும் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து கூடியுள்ள இத்துறையின் முன்னணியில் உள்ள தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், திரைப் பட விமர்சகர்கள் அனைவரையும் மகிழ்வோடு வரவேற்கிறேன்.

இந்த உலகப்படவிழா என்னைப் போலவே பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு நம்முடைய நகரத்திற்கு திரும்ப வந்திருக்கிறது.

திரைப்படத் தொழில் உலகின் உலகத் தலை நகரங்களில் ஒன்றான சென்னை நகரத்திற்கு இது போன்ற வாய்ப்புக்கள் அடிக்கடி கிட்டும் என்றும், இவ்வளவு அதிகமான கால இடைவெளி எதிர் காலத்தில் ஏற்படாது என்றும் என்னுடைய நம்பிக் கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பட்ட வகையில் பல வெளிநாடுகளிலும், பல இந்திய மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்கள் இந்த விழாவில் நீங்களெல்லாம் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழா நிகழ்ச்சிகளுடன்- குறிப்பாகத் தென்னிந் தியத் திரைப்பட வர்த்தகக் கழகம்முந்தையதமிழ்ப் படங்களைத் திரையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, திரைப்படக் காட்சிகள் மட்டுமின்றிப் பல கருத்தரங்குகளும், விவாத அரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது திரைத்துறை விமர்சகர்கள் உலகத் திரைப் படங்கள் பற்றித் தங்களுடைய விரிவான விமர் சனங்களையும், பாராட்டுக்களையும் வழங்க வாய்ப்பினை நல்கும். இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்கள், அண்மையில் மறைந்த ஐந்துமுன்னணிப் படத் தயாரிப்பாளர்களின் படங்களையும் இவ் விழாவில் இடம்பெறச் செய்திருப்பது பாராட்டுக் குரியது. திரு.வி.சாந்தாராம், திரு.சங்கரநாத், திரு.மன்மோகன் கிருஷ்ணா, திருமதி அருந்ததி தேவி, திரு.எஸ்.முகர்ஜி ஆகியோரின் நினைவுக்கு எனது அஞ்சலியைச் செலுத்த விரும்புகிறேன்.

இங்கு வருகை தந்திருக்கும் பார்வையாளர் களிடையே திரைப்படங்களைப் பற்றியோ அல்லது திரைப்படத் தொழில் பற்றியோ நான் எதுவும் அதிகம் சொல்லப் போவதில்லை.

புறக்கணிக்க முடியாத பல்வேறு கருத்துக்களை ஒருங்கிணைத்து சமுதாயத்திற்கு வழங்கக் கூடியது திரைப்படத்துறை. இவ்வகையில் இத்துறை போன்ற வேறு ஒரு துறையோ, தொழிலோ உண்டா என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடி யாதது. காண்போர் உள்ளத்தை நெகிழச் செய்யும் கலையில் திரைப்படங்கள் இணையற்றவை. கலை



யையும், தொழில் நுட்பத்தையும் ஒரு கவர்ச்சி கரமான வகையில் அவை ஒருங்கிணைக்கின்றன. பொழுதுபோக்கு மற்றும் கல்வி ஆகிய இரண்டிலும் அதிகச் செலவில்லாமல் மிகப்பெரும் வாய்ப்புக் களை ஏராளமான மக்கள் திரைப்படங்களின் வாயிலாகப் பெறுகிறார்கள். எனவே சமூக விழிப்புணர்ச்சியை மேம்படுத்தத் திரைப்படங்கள் ஒரு சக்திவாய்ந்த சாதனமாக உள்ளன.

திரைப்படத்துறை வேலை வாய்ப்புகள் அதிகம் உடையவை. இந்தத் துறை பல மட்டங்களிலும் ஸ்கில்டு அண்டு செமிகில்டு என்று கூறப்படும் திறமைமிக்க தொழிலாளர்களுக்கும், ஓரளவே திறமைபெற்ற தொழிலாளர்களுக்கும் மிகப் பெரும்அளவில் வேலை வாய்ப்பை வழங்கு கிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் மிக முக்கியமான நிதி வருவாய்க்கான ஆதாரமாக வும் இத்துறை உள்ளது.

இந்த முக்கியமான பின்னணிகளைக் கருத்தில் கொண்டு திரைப்படத்துறைக்கு நமது அரசு தொடர்ந்து எல்லாவகையான ஆதரவையும் ஊக் கத்தையும் அளித்து வருகிறது. குறிப்பாக- அதனால் தான் இத்துறையில் திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்படங்கள் திரையிடுதல் ஆகியவைகளில் தமிழ்நாடு ஒரு முன்னணி மையமாகத் திகழ்கிறது. 1946-ஆம் ஆண்டு நமது பாலிடெக்னிக்குகளில் சினிமாட்டோகிராபி மற்றும் சவுண்ட் எஞ்சினி யரிங் ஆகியவைகள் பாடத்திட்டங்களில் அறிமுகப் படுத்தப்பட்டன.

1960-ஆம் ஆண்டு திரைப்படக் கல்லூரி நிறுவப்பட்டது. 1970-இல் நாம் ஒரு ஸ்டுடி யோவை நிறுவி அதன் மூலம் மாணவர்களுக்கும் வெளியில் இருந்து வருகிற தயாரிப்பாளர்களுக் கும் வசதிகள் கிடைக்க வகை செய்தோம்.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு திரைப் படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் தொழில் நுட்ப வல்லுநர்களாக, நடிகர்களாக, பயிற்சிகள் வழங்கி ஏராளமானவர்களுக்கு தனது பங்கைச் செலுத்தியுள்ளது. சினிமாட்டோகிராபி, திரைப்பட இயக்கம், சவுண்ட் எஞ்சினியரிங், எடிட்டிங், பிலிம் புராசசிங் மற்றும் பல்வேறு துறைகளில் ஆண்களும் பெண்களுமாகப் பயின்று ஆயிரத்து நூறு பேர் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளில் பலர் அகில இந்திய அளவில் புகழ் ஈட்டி, புதுமையான தயாரிப்பாளர்கள், நடிகர்கள் என்று மலர்ந்து மணம் பரப்பியிருக் கிறார்கள் என்பதிலே நாங்கள் பெருமையடை கிறோம்.

கடந்த ஆண்டு எங்களுடைய அரசு அமைந்த வுடனேயே திரைப்படத் துறையில் ஏற்பட்ட பல் வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சி யில் நானே நேரடியாக ஈடுபட்டு அதிக நேரம் செலவழித்துள்ளேன். அந்த விவாதங்கள் வரி விதிப்பு அமைப்பைச் சீரமைப்பதாக அமைந்து பலனளித்தன. திருட்டு வீடியோக்களைத் தடை செய்ய நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சிறந்த தமிழ்ப் படங்கள், சிறந்த நடிகர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லு நர்களுக்கு மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தை நாங்கள் துவக்கினோம். அந்த விருதுகள் ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை

அந்த விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் தொழில் நுட்ப வல்லுநர்கள் அனைவரும் பதின்மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டு அவர்களும் விருதுகள் வழங்கும் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

மற்றொரு புதுமையான திட்டம் குறைந்த செலவில் எடுக்கும் தரமான தமிழ்ப் படங்களுக்கு மானியம் வழங்குவதாகும்.

திரைப்படத் தொழிலின் நலனுக்கும், வளர்ச்சிக்கும் எங்களுடைய அரசு தொடர்ந்து எல்லா வகையான உதவிகளையும் செய்யும் என்ற உறுதி மொழியைத் திரைப்படத் துறையினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்க நான் விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் எங்களுடைய மாநிலத்திற்கும், அதன் தலைநகரமாகிய இந்த நகரத்திற்கும், திரைப் படங்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய வரலாற்றை நான் நினைவு கூர்வது இந்த நேரத்தில் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பாரீஸ் நகரத்தில் முதன்முதலாக லூமெயர் சகோதரர்கள் திரைப்படங்களைத் திரையிட்டனர். அவ்வாறு திரையிடப்பட்ட அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1897-இல் சென்னையில் முதல் திரைப்படம் திரையிடப்பட்டது.

ஆர்.நடராச முதலியார் தயாரித்த 'கீசக வதம்' என்னும் முதல் படம் ஒரு பேசாத படம். 1916-ஆம் ஆண்டில் திரையிடப்பட்டது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல அண்டையிலே உள்ள ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பல முன்னணித்தயாரிப் பாளர்கள், நடிகர்கள் ஆகியோரின் நிலைக் களமாகத் தமிழகம் விளங்கியது என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். ராஜா சாண்டோ, நமது மாநிலத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்த அமெரிக்கரான எல்லிஸ் ஆர்.டங்கன், பல சமூகக் கருத்துக் களைத் திரைப்படங்கள் மூலம் பரப்புவதற்குக் காரணமாக இருந்த திரு. கே.சுப்பிரமணியம், திரு.எஸ்.எஸ்.வாசன், ஜூபிட்டர் சோமு, ஸ்ரீராமுலு நாயுடு, திரு.மெய்யப்பச் செட்டியார், திரு. டி.ஆர்.சுந்தரம் போன்றோர் உட்பட்ட முன்னணி இயக்குநர்களையும் திரு. எம்.கே.தியாக ராஜ பாகவதர், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பி.யூ.சின்னப்பா, திரு. எம்.ஜி.ஆர். திரு. எம்.ஆர். ராதா போன்ற பல சிறந்த நடிகர்களையும் நாம் பெற்றிருந்தோம். பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் திரை இசைத்துறையில் குறிப்பிடத்தக்க பங்கு பணி ஆற்றியுள்ளார்கள்.

நம்முடைய பல முன்னணி நடிகைகளில் திருமதி டி.பி.ராஜலட்சுமி, முதன்மையானவர்.

அண்மைக்காலங்களில் தொலைக்காட்சி ஒரு பெரும் சாதனமாக வளர்ந்துள்ளது. இதனால் திரைப்படத்துறை பாதிக்கப்படுமோ என்று பலர் கவலை தெரிவித்தார்கள். ஆனால் தொலைக் காட்சியும், திரைப்படத்துறையும் ஒன்றுக்கொன்று ஆதரவானவை. மேலும் தொலைக்காட்சி திரைப் படங்களுக்கு நிதி உதவியும், கலை ரீதியாகவும் ஆதரவு அளிக்கும் என்றே கருதுகிறேன். மேலும் திரைப்படத்துறைக்குக் கூடுதலான ஒரு வருவாய்த் துறையாகத் தொலைக்காட்சி திகழும். உதாரணமாக இந்த விழாவிலே காட்டப்படுகிற வெளி நாட்டுத் திரைப்படங்கள், இந்தியத் திரைப்படங் களை ஒரு சில ஆயிரம் மக்கள்தான் இந்த விழா விலே பார்க்க முடியும். அந்த நல்ல படங்களை யெல்லாம் தொலைக்காட்சியில் காட்டினால் அது நலம் பயக்கும். ஏராளமானோர் காணலாம்.

★விடா முயற்சியிருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்; தூற்றினோரே துதிபாடி நிற்பர்; ஏளனம் பேசினோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்!

—அறிஞர் அண்ணா

இது தொடர்பாக நான் மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சருக்கு ஒரு வேண்டு கோளை முன்வைக்கிறேன். தென்னாட்டில் உள்ள நாங்களெல்லாம் நேரத்தோடு உறங்கச் சென்று வைகறையில் துயில் எழுவது என்பதிலே மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். எனவே இந்தத் திரைப் படங்களை தொலைக்காட்சியில் இரவு பத்து மணிக்கு முன்னதாகவே ஒளிபரப்புவது விரும்பத் தக்கதாக இருக்கும் என்ற வேண்டுகோளை மத்திய அமைச்சர் முன் வைக்கிறேன்.

இந்த விழாவை ஏற்பாடு செய்ய, பல துறை யினர் மிகுந்த சிரமங்களை மேற்கொண்டிருக் கிறார்கள். இவ்விழாவிற்கான செலவினங்களைப் பெருந்தன்மையோடு மத்திய-மாநில அரசுகள் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. அழகிய-அமைதி நிறைந்த நகரமான இச்சென்னை நகரத்தில் விழா விற்கு வருகை தந்துள்ள நீங்களெல்லாம் தங்கி யிருக்கிற காலத்தை உற்சாகமாகவும், உபயோக மாகவும் செலவிட எல்லா வகையான முயற்சி களையும் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். உங்களுக்கு ஏதாவது சிறிய அசௌகரியங்கள் ஏற்படுமானால் நீங்கள் அவைகளையெல்லாம் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இந்த விழாக் காலத்தில் சென்னை நகரத்தில் நீங்கள் தங்கியிருந்த நாட்கள் உங்கள் நினைவுகளில் என்றும் பசுமையாக நிலை பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த வகையில் அனைத்து வசதிகளும் செய்யப்படும் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இந்த வார்த்தைகளுடன் இருபத்தி இரண்டாவது இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழாவைத் துவக்கி வைக்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

# சிறுசேமிப்புத் துறை

## முதலீடு செய்த அன்றே

# ஈடு இணையற்ற பலன்கள்

## வங்கிகள் மற்றும் பரஸ்பர நிதி வழங்க இயலாத சலுகைகள்



**1.1.91** முதல்
**31.3.91** வரை
ரூ.**1000/-** முதலீடு
செய்யும்
முதலீடுதாரர்களுக்கு
''விபத்துக் கால
இன்சூரன்ஸ்''
வசதி.



மூலதன சந்தையில் சிறுசேமிப்பு பிரத்யேக உரிமை வகிக்கிறது.

**சிறுசேமிப்பில் முதலீடு செய்த கோடிக்கணக்கான முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையும் ஒப்பற்ற கூடுதல் சலுகைகளை பெறுங்கள்.**

**முதலீட்டிற்கு அதிகபட்ச வட்டி**

| திட்டம் | ஆண்டு | வட்டி விகிதம் |
| --- | --- | --- |
| தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு | 5 | 15.82% |
| ,, | 6 | 16.91% |
| கிசான் விகாஸ் பத்திரம் | 5 | 17.6% |
| ,, | 5½ | 18.18% |
| இந்திரா விகாஸ் பத்திரம் | 5 | 20% |

**சிறப்பு அம்சங்கள்:**

- பாதுகாப்பான முதலீடு மற்றும் நம்பகமான வட்டி
- வங்கிகள், நிறுவனங்கள் அளித்திடாத உயர்ந்த வட்டி
- **வருமானவரி மற்றும் சொத்து வரிவிலக்கு (பிரிவு 88ன்படி - NSC மற்றும் பிரிவு 5(i)ன்படி சொத்து வரிச்சலுகை)**
- **பிரிவு 88ன்படி வட்டிக்கு வருமான வரிவிலக்கு**
- குழந்தைகளின் பெயரில் செய்யும் முதலீட்டிற்கு பிரிவு 88ன்படி வருமான வரிவிலக்கு
- வங்கிகளில் கடன்வசதி
- வாரிசுதாரர் நியமனவசதி
- ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் மாற்றக் கூடிய வசதி
- எல்லா அஞ்சலகங்களிலும் காசோலை வசதி (சேமிப்பு கணக்கிற்கு)
- உங்கள் வீடு தேடி வரும் ஏஜென்டுகளின் வசதி.

**கூடுதல் சலுகைகள்:**

**1.1.91 முதல் 31.3.91. வரை ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் மூலம் 262 பரிசுகள்**

- ★ **ரூ.1000/-ம் அதற்கு மேலும் K.V.P., N.S.C. VIII Issue போன்ற சில குறிப்பிட்ட திட்டங்களில் செய்யும் முதலீட்டிற்கு 1% ஊக்கத்தொகை.**
- ★ **பங்கு மார்க்கட் தரகர்களுக்கு (Stock Brokers) 2% கமிஷன்**
- ★ **நிறுவனங்கள் இந்திரா விகாஸ் பத்திரத்தில் செய்யும் முதலீட்டிற்கு 10 ஆண்டுக்குப்பின் அதிகபட்ச வட்டியாக 54.66% பெறலாம்.**

**சேமிப்பு பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்**

சிறுசேமிப்பின் அவசியம் பற்றிய இலவச விவரம் அறிய, தொடர்பு கொள்ளுங்கள்.

**மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்**
**இயக்குநர்**
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 846209/840223

DIPR/3032/MS/90/ARIES



# தமிழ் வளர்ச்சியில் ஒரு புது மலர்ச்சி

மாண்புமிகு கல்வியமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**

''பண்டை நலம், புதுப்புலமை, பழம்பெருமை அனைத்தையும் நீ படைப்பாய், இந்நாள் தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே'' என்ற பாவேந்தர் முழக்கத்தைக் குறிக்கோளாக ஏற்று, அயராது பாடுபடுவது கழக ஆட்சி.

**மொழிக் காவலர்களுக்கு நிதிஉதவி**

தமிழைக் காப்பதற்காகவும், தமிழக எல்லையைக் காப்பதற்காகவும் உடல், உடைமை, உயிர் ஆகியவற்றை இழக்கத் துணிந்த அரும்பெரும் வீரர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 1187 மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. திங்கள் ஒன்றுக்கு ரூ.250/- அளவு உதவித்தொகையை ரூ.350/- அளவு உயர்த்தியதுடன், இவர்கள் தமிழகம் முழுமையும் அரசு சார்புடைய போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமின்றிப் பயணம் செய்யும் சலுகையையும் வழங்கியுள்ளது. இவ்வகையில் சுமார் ரூ.75 இலட்சம் ஆண்டொன்றுக்குத் தமிழக அரசு செலவிடுகின்றது.

தமிழில் எழுதப் பெறும் சிறந்த நூல்களை நிதியுதவி வழங்கி வெளியிடுவதற்குத் தமிழக அரசு துணை நிற்கிறது. இவ்வகையில் 1989-90-ஆம் ஆண்டில் 28 நூலாசிரியர்களுக்கும் 1990-91-ஆம் ஆண்டில் 21 நூலாசிரியர்களுக்கும் சுமார் ரூ.1,40,000/- நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த ஆண்டிலேயே மேலும் 50 நூலாசிரியர்களுக்குச் சுமார் ரூ.2 இலட்சம் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

**திருவள்ளுவர் திருநாளில் சிறந்த நூல்களுக்குப் பரிசு**

தமிழில் வெளியிடப்பெறும் சிறந்த நூல்களுக்குத் திருவள்ளுவர் திருநாள் விழாவில் பரிசு வழங்கும் திட்டம் இந்த ஆண்டு புதுப்பொலிவோடு நிகழ்த்தப் பெறவிருக்கிறது. முதல் பரிசு ரூ.2,000/-, இரண்டாம் பரிசு ரூ.1,000/- என்று இருந்ததை மாற்றி, முதற்பரிசு ரூ.5,000/-, இரண்டாம் பரிசு ரூ.3,000/- என உயர்த்தியும், மூன்றாம் பரிசு ரூ.1,000/- எனப் புதுவதாக உருவாக்கியும், இந்த ஆண்டு பரிசுகள் வழங்கப் பெற இருக்கின்றன. 21 துறைகளில் நூல் எழுதிய 63 நூலாசிரியர்கள் சுமார் ரூ.1,89,000/- அளவுக்குப் பரிசாகப் பெறவிருக்கின்றனர். சென்ற ஆண்டில் இவ்வகையில் ரூ.53,000/- பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்க் கருவூலங்களாகிய பண்டை இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பிற மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் வெளியிட்டு, மொழி வளம் சேர்க்கும் திட்டத்தின்படி இந்த ஆண்டு கம்பராமாயணத்தின் அயோத்தியா காண்டம் - ஆரணிய காண்டம் ஆகியவை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் அறிஞர் வில் ரூரண்ட் அவர்களால் எழுதப் பெற்றுள்ள 'நாகரிக வரலாறு' என்ற நூலின் 3 பகுதிகள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப் பெறவிருக்கின்றன. பாவேந்தர் பாரதிதாசனாரின் 100 பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப் பெறவிருக்கின்றன. இவ்வகை

**1990-91-ஆம் ஆண்டில் ரூ.1,99,29,000 திட்டத்தில் தமிழை வளர்க்கும் பணிகள் நிறைவேற்றப் படுகின்றன.**



யில் சுமார் ரூ.5 இலட்சம் செலவிட திட்டமிடப் பட்டுள்ளது.

**பாவேந்தர் நூற்றாண்டு விழா**

பாவேந்தர் பாரதிதாசனாருக்கு நூற்றாண்டு விழா நிகழ்த்தும் இந்த ஆண்டில் பாவேந்தர் பரம்பரை எனத்தகும் 21 கவிஞர்களையும், 2 பதிப்பாளர்களையும் தேர்வு செய்து, அவர்களுக்கு ரூ.2,30,000/- பரிசாக வழங்கியது. கவிதைப் போட்டி ஒன்று நிகழ்த்தி 100 கவிஞர்களைத் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- என்ற அளவில் மொத்தம் ரூ.1,00,000/- பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவில் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

**தமிழக வரலாறு**

தமிழக வரலாறு முழுமையாக எழுதப் பெற வேண்டும் என்ற வரலாற்று வரைவுத் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அத் திட்டத்தைப் புதுப்பித்து முன்னர் வெளியிடப் பட்ட வரலாற்று நூல்களுடன் பல்லவர்-பாண்டியர் காலத்தின் வரலாற்றின் முதல் பகுதி இந்த ஆண்டில் வெளியிடப் பெறவிருக்கிறது. இதற் கென சுமார் ரூ.1,50,000/- செலவிடத் திட்ட மிட்டுள்ளது.

**வித்தகர்களுக்கு விருதுகள்**

1985-ஆம் ஆண்டிற்குப் பின்னர் திரு.வி.க. விருது வழங்கும் திட்டமும், 1986-ஆம் ஆண் டிற்குப் பின்னர் பாவேந்தர் பாரதிதாசனார் விருது வழங்கும் திட்டமும் நிறுத்தப் பெற்றிருந் தன. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 1986, 1987, 1988, 1989, 1990 ஆகிய ஆண்டுகளுக் குரிய இவ்விருதுகள் வழங்கப் பெற்றுள்ளன. இதனால் அரசுக்குச் சுமார் ரூ.1 இலட்சம் செல வாகியுள்ளது. திருவள்ளுவர் விருது வழங்கும் திட்டமும், 1988-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வரசு 1989-இல் பொறுப் பேற்றவுடன் 1989, 1990 ஆகிய ஆண்டுகளுக் குரிய திருவள்ளுவர் விருதுகள் வழங்கப் பெற்றன. ரூ.10,000/- என்றிருந்த இவ்விருதுத் தொகையை இனி ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கிட முதல்வர் அறிவித்துள்ளார்.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி 1989-90-ஆம் ஆண் டிற்கு 17 அறிஞர்கள் தெரிவு செய்யப் பெற்றனர். அவர்களுக்கு வழங்கப் பெற்ற நிதியுதவியைத் திங்கள் ஒன்றுக்கு ரூ.250/-லிருந்து ரூ.350/- ஆக அரசு உயர்த்தியுள்ளது. இந்த் ஆண்டு திருவள்ளுவர் திருநாள் விழாவில் 20 தமிழறிஞர்கள் நிதியுதவி பெற இருக்கின்றனர். இத்திட்டத்தின்படி முன்னர் நிதியுதவி பெறுவோருக்கும் சேர்த்து 1990-91-ஆம் ஆண்டில் ரூ.9,11,400/- அரசு செலவிடுகின்றது.

**தமிழ் வளர்ச்சிப்பணிக்கு நிதியுதவி**

தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், சங்கங்கள் முதலியவற்றுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் படி, சென்னை ஆசியவியல் நிறுவனம், திருவனந்த புரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி, திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம், மதுரை தமிழ்ச் சங்கம், அலகாபாத் பாஷா சங்கம், பஞ்சாப் பல்கலைக்கழகம், பெங்களூர் தமிழ்ச் சங்கம் ஆகியவை நிதியுதவி பெற்றிருக்கின்றன. இவ்வகையில் 1989-90, 1990-91 ஆகிய ஆண்டு களில் சுமார் ரூ.17,32,640/- நல்கைகளாக வழங்கப் பெற்றுள்ளன.

### நினைவுத் தூண்

சங்கப் பெரும் புலவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த இடங்களில் நினைவுத் தூண் எழுப்பி, அவர்தம் நிலைத்த புகழைப் போற்ற அரசு முடிவு செய்துள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் இடைகழிநாட்டு நல்லூரில் நத்தத்தனாருக்கும், ஒக்கூரில் மாசாத்தனார், மாசாத்தியார் ஆகிய இருவர்க்கும், திருநெல்வேலி மாவட்டம் மாங்குடியில் மாங்குடி மருதனாருக்கும், கருவூரில், அவ்வூரில் வாழ்ந்த பல புலவர்களுக்கும் நினைவுத் தூண்கள் எழுப்ப அரசு சுமார் ரூ.5.5 இலட்சம் செலவிடுகின்றது.

### ஆட்சிச் சொல்லகராதி

தமிழில் சிறந்த வரைவுகளும், குறிப்புகளும் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ஆர்வம் ஊட்டுவதற்காகப் பரிசுகள் வழங்கும் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. அத்திட்டத்தை மீளப் புதுப்பித்து இந்த ஆண்டு பரிசுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வரசுப் பணியாளர்களுக்குத் தமிழில் எழுத உறுதுணை செய்ததற்கு ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு ஒன்று இந்த ஆண்டு வெளியிடப் பெறும். இவற்றிற்காக அரசு சுமார் ரூ.4.64 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

ஊர்ப் பெயர்களையும், தெருப் பெயர்களையும் பிழையின்றி எழுதித் தமிழ்மணம் கமழச் செய்ய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேராசிரியர் டாக்டர் மா. நன்னன், அருங்கவிஞர் அப்துல் ரகுமான் ஆகியோரைக் கொண்ட குழுவினை அரசு அமைத்துள்ளது.

### வள்ளுவர் கோட்டத்தில் தெள்ளு தமிழ்க்குறள்

வள்ளுவர் கோட்டத்தில் தெள்ளு தமிழ்க் குறள் காலையும், மாலையும் ஒலிபரப்பப்படுகின்றது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் திருக்குறள் வகுப்புகள் அங்கு நடத்தப் பெறுகின்றன.

மயிலாடுதுறை முனிசீப் வேதநாயகனார், பெருநாவலர் மதுரைக் கார்மேகனார் ஆகிய தமிழறிஞர்களுக்கு நூற்றாண்டு விழாக்கள் நிகழ்த்தி அரசு சிறப்பித்தது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் தனித்து இயங்கிட வகை செய்யப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. 'அ' முதல் 'ஔ' ஈறாக உள்ள சொற்களின் அகர முதலித் தொகுப்பின் இரு பகுதிகள் இவ்வாண்டில் வெளியிடப் பெறவிருக்கின்றன.

தமிழொடு ஐரோப்பிய மொழிகளிலும் தேர்ந்த அறிஞர் ஞானகிரி நாடார் அவர்களின், ஒப்பியன் மொழிப் புலமையால் - பயன்பெறும் நோக்குடன், 'மேலைநாட்டு மொழிகளில் தமிழின் வேர்கள்' குறித்து - அவர்கள் நிகழ்த்தியுள்ள ஆய்வு அடிப்படையில் - ஒரு களஞ்சியத்தை உருவாக்கிட அவர்தம் பணிக்கு ஆதரவு வழங்கியுள்ளது. விரைவில் அந்த ஆய்வு ஏடு அச்சேறும் என எதிர் பார்க்கலாம்.

### அருங்காட்சியகங்கள்

இந்த நாட்டில் உள்ள அருங்காட்சியகங்களில் தொன்மை சார் சென்னை அருங்காட்சியகத்தைப் போல், மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்கள் அமைத்து மக்களுக்கு மகிழ்வும் தொன்மைப் பெருமித உணர்வும் ஊட்ட அரசு திட்டமிட்டுள்ளது. ரெனோசெரஸ் என்னும் அற்றுப் போன உயிரின வகையைச் சார்ந்த மாபெரும் விலங்கின் பளிங்காடி உருச்சமைத்து காட்சிக்கு வைக்கவும், காட்சிக் கூடங்களில் உள்ள பொருட்களின் பெயர்களைத் தூய தமிழில் எழுதி வைக்கவும், ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் தீட்டப்பட்ட நெய் வண்ண நெட்டோவியங்களைப் பழமைச் சிறப்பு மாறாமல் புதுப்பிக்கவும், தொல்பொருள் விளக்கமாக அமையும் தொன்மை வெளியீடுகளை மீண்டும் புதுப்பித்து வெளியிடவும் அரசு திட்டமிட்டுள்ளது. சென்னையில் சிறுவர் அருங்காட்சியகம் நிறுவியிருப்பது ஒரு சிறப்புச் சாதனையாகும்.

### பூம்புகார் கடல் அகழ்வாராய்ச்சித் திட்டம்

பூம்புகார் கடல் அகழ்வாராய்ச்சித் திட்டம் தமிழக அரசின் தொல்லியல் ஆய்வுத் துறையால் நிகழ்த்தப் பெறவிருக்கிறது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு இசைப் பயிற்சி மையம், ஓவிய நுண் கலைக் குழு ஆகியவை மரபார்ந்த கலை வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டி வருகின்றன. நலிந்த கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், கலைமாமணிப் பட்டம் வழங்கிப் பாராட்டுதல், பிற நாட்டுக் கலைஞர்களையும், பிற மாநிலக் கலைஞர்களையும் நமது மாநிலத்திற்கு வரவழைத்துப் பாராட்டுதல், தமிழகக் கலைஞர்களைப் பிற இடங்களுக்கு அனுப்பி கலைச் சிறப்புகளை அறிந்து வரச் செய்தல் முதலியன பேரார்வத்தோடு மேற்கொள்ளப்படுகின்றன.

### பண்பாட்டுப் பலகணி

ஒவ்வொரு திங்களும் நம் பண்பாட்டுக் கூறுகளை விளக்குகின்ற பண்பாட்டுப் பலகணி என்ற நிகழ்ச்சி அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் பட்டறிவு வாய்ந்த பழம் பெரும் கலைஞர்களைக் கொண்டு நிகழ்த்தப் பெறுகின்றன. திங்கள் ஒன்றிற்கு ரூ.1,500/- இதற்கென அரசு செலவிடுகின்றது.

1989-90-ஆம் ஆண்டின் இறுதி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,23,49,000/- ஒதுக்கீடு செய்து, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்தியது. 1990-91-ஆம் ஆண்டில் ரூ.1,99,29,000/- திட்டத்தில் தமிழை வளர்க்கும் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு உறுதுணை செய்துள்ளது. மேலும் ஆட்சிமொழி ஆக்கப் பணிகள், -சட்ட வரைவுகளின் மொழி பெயர்ப்புகள் முதலானவை ஆட்சிமொழிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சித்த மருத்துவத்தில் நாடி



**- டாக்டர் மோகனமாலா**

**இ**ன்றைய நாகரிக உலக வளர்ச்சியில் விஞ்ஞானம் எத்தனையோ வகையில் முன்னேற்றம் கண்டு அரிய பல சாதனை நிகழ்த்தி வருவது கண்கூடு. குறிப்பாக, மருத்துவத்துறை மாற்றம் கண்டுள்ள விந்தைகளோ அள விடற்கரியன.

இந்த நிலையிலும், மருத்துவ விஞ்ஞானத்திற்கு அடிப்படையான மருத்துவச் சோதனையில் நோயினைத் தெளிவாக உணர்த்துகின்ற ஆற்றல் ஒவ்வொருவர் உடலின் நாடித் துடிப்பே ஆகும்.

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

-என்பது திருவள்ளுவர் வாக்கு. அதன்படி நோய் இன்னதென்று நாடித் துடிப்பைக் கொண்டு ஆய்ந்து, நோய் தீர்க்கும் முயற்சியில், மருத்துவர் சாதனை பல நிகழ்த்தியுள்ளனர். பண்டைய நாளில் வாழ்ந்த சித்தர்களின் பாடலின் வாயிலாகப் பல விவரங்களைத் தெளிவுபடுத்தி யுள்ளார்கள். அதிலும் 'நாடி' முறைகளை மிகத் துல்லிய மாகக் கணக்கிட்டுக் காட்டியுள்ளதாலும், அனுபவ வாயிலாக உணர்த்தியுள்ளதாலும், இன்று நாம் அவற்றின் பயனை அடைய முடிகிறது.

**நாடிக் கணிப்பு முறை:**

உலகிலுள்ள எந்த மருத்துவ முறையும் நோய்க் கணிப்புக்கும், நோயாளியின் அப்போதைய நிலையை அறியவும், நாடியை ஒரு முறையாகக் கொண்டுள்ளது; சித்த மருத்துவ நாடிக் கணிப்பு முறை மிக நுணுக்கமும், உயர்ந்ததுமாகும். சித்த மருத்துவக் கணிப்பு முறைகளா கிய எண்வகைத் தேர்வுகளில் நாடிக் கணிப்பு முறை இறுதியானதும் உறுதியானதும்கூட.

நாடியை மட்டுமே கொண்டு ஒருவர் இன்ன நோய் வாய்ப் பட்டிருக்கிறார் என்றும், இத்தனை மணி நேரத்தில் இறந்துவிடுவார் என்றும் அறுதியிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு நாடி விஞ்ஞானத்தில் மேம்பட்ட சித்த மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் குறிப் பிட்ட சில ஆண்டுகளுக்குள் அந்த நாடி விஞ்ஞானத்தில் தேர்வு பெறுவது என்பது இயலாததொன்றாகும். பல்லாண்டுகள், பல்லாயிரக்கணக்கான பிணியாளரின் நாடிகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து, சித்தர்கள் கூறிய நாடி நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, அனுபவம் பெற்றாலொழிய, நாடி விஞ்ஞானத்தில் முழுத்தேர்ச்சி அடைவது இயலாது; இதற்கு நாடியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியரின் துணையும் வேண்டும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாடி விஞ்ஞானம் பற்றி சித்தர்கள் என்னசொல்கிறார்கள் என்றால்-ஒரு சித்தர் சொல்கிறார்:

''நாடியென்றால் நாடியல்ல நரம்பில் தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானுமல்ல
நாடியென்றால் எழுபத்தீரா யிரமுமல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேற்பன முமல்ல
நாடியென்றால் அண்ட பகிரண்ட மெல்லாம்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே''

-என்று கூறுகிறார்.

நாடி என்பது உடம்பிலுள்ள ரத்தக் குழல்களில் உண்டாகும் துடிப்புமட்டுமல்ல. அது எழுபத்தீராயிரம் என்று கூறுவார்கள் - அது மட்டுமல்ல. நாடி என்பது வளி, அழல், ஐயம், என்று மூன்று மட்டுமல்ல. பின் எது?

இப்பேரண்டம் முழுவதும் பரந்து கிடக்கின்ற அணு வுக்குள் அணுவாக - மறைந்துறையும் பேரறிவுப் பொருளாம் பதிக்கு இருப்பிடமாய் அமைந்த உயிராகிய ஆன்மாவின் இயக்கமாகும்.

எனவே, நாடி என்பது ரத்தக் குழாய்களில் உண் டாகும் துடிப்புக்களின் எண்ணிக்கையோ (Rate), துடிப்புக்களின் தாள அமைதியோ (Rhythm), எழுப்பும் பரிமாணமோ (Volume), அழுத்தமோ (Tension) மட்டுமல்ல.

ஒவ்வொரு உடம்பிலும் செயல்படும் உயிரின் முழு இயக்கமாகும். இந்த உயிரின் இயக்கம் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் செயல்படுகிறது. பத்து இடங் களில் ரத்தக் குழாய்களின் ரத்த அழுத்தத்தில் வெளிப் படையாகப் பிரதிபலிக்கிறது. நாடியை உடம்பில் பத்து இடங்களில் பார்க்கலாம். இந்த பத்து இடங்களிலும், எளிதாக யாருக்கும் எந்த நேரத்திலும் பார்க்கின்ற

**''நாடி வகைகள், நாடியை அறியும் முறைகள் ஆகியவற்றை இக்கட்டுரை விளக்குகிறது''**

இடங்களாக வாய்த்தவை கைகள், ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் பார்க்க வேண்டியது விதி.

நாடி பார்க்குமுன், பிணியாளரின் கைவிரல்களை நெட்டை வாங்கி, உள்ளங்கையில் சூடு பறக்கத் தேய்த்த பின், மூன்று விரல்களால் அழுத்தியும், விட்டும், மாறி, மாறிப் பார்க்கும்போது, வளி, அழல், ஐயம் ஆகிய வற்றில் நிலை வேறுபாடுகளுக்குத் தகுந்தாற்போல் மருத்துவம் செய்யவேண்டியது மருத்துவரின் கடமையாகும்.

**வாத நாடி:**

வாத நாடியின் முன்பாய்ச்சல் வெட்டைச் சூட்டை யும், அதனால் உண்டாகும் நோய்களையும், பின் பாய்ச்சல் பித்தத்தின் துணையை நாடி இருப்பதால் வாத பித்தத்தையும், அதனால் உண்டாகும் நோய்களை யும், வலப் பாய்ச்சல் வாத சூலையையும், இடப் பாய்ச்சல் வாதக் குன்மத்தையும் குறிக்குமென்பதாம்.

**பித்த நாடி:**

பித்த நாடியின் முன்னியக்கம், பித்த வாய்வையும், அதனாலுண்டாகும் நோய்களையும், மேக வாய்வு முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தின் துணையை நாடுவதாக இருப்பதால், பித்த கபத்தால் உண்டாகும் நோய்களையும், சுவாசகாசம் போன்றவைகளையும், வல இயக்கம் பித்த சூலையையும், இட இயக்கம் பித்த குன்மத்தையும் குறிக்கும்.

**கப நாடி:**

கப நாடியின் முன்னியக்கம் கப பித்தத்திலுண்டாகும் பிணிகளையும்க்ஷயம் முதலியவைகளையும்,பின்னியக்கம் கபத்தைக் குறிப்பிடுவதால் கப சம்பந்தமான பல பிணிகளையும், வல இயக்குமும், இட இயக்குமும் அசாத்திய நிலைகளையும் முக்கியமாக இட இயக்கம் மரணத்தையும் குறிக்கும் என்பர்.

இடகலையென்ற வாத நாடியானது வலது பாதப் பெருவிரலிலிருந்து கிளம்பி, மூலாதாரத்தின் மார்க்க மாய், இருதயஸ்தானத்திற்கு இடது புறமாய், கண்டம் வரையில் ஓடி, கத்திரிக்கோல் மாறலென மாறி, சிரசி லுள்ள சந்திர மண்டலத்தை அடைந்து, இடது நாசியின் வழியாகச் சென்று, இடக் கரத்தில் பாயுமென்றும், பிங்கலை என்ற பித்த நாடியானது இடது பாதப் பெருவிரலிலிருந்து கிளம்பி, மூலாதாரத்தின் மார்க்க மாய், இருதய ஸ்தானத்திற்கு வலப்புறமாகக் கண்டம் வரையில் ஓடி, கத்திரிக்கோல் மாறலென மாறி, சிரசிற் கேறி, அங்குள்ள சந்திர மண்டலத்தை அடைந்து, வலது நாசியின் வழியாகச் சென்று வலக்கரத்தில் பாயு மென்றும், சுழுமுனையென்ற கப நாடியானது இவை இரண்டிற்குகிடையே மூலாதாரத்தினின்று கிளம்பி, உச்சி வரை ஓடி சூரிய மண்டலத்தை அடைந்து, வலது இடது நாசித்துவாரங்களுக்கு இடையே இயங்கி நிற்கு மென்றும், வாதத்திற்கு ஆதாரம் அபான வாயு என்றும், பித்தத்திற்கு ஆதாரம் பிராணவாயு என்றும், கபத்திற்கு ஆதாரம் சமான வாயு என்றும் அறியக் கிடக்கிறது.

நாடிகள் என்றால் நரம்புகள், இவற்றில் 72,000 உண்டு. அதில் விசை நரம்பென ஒன்றுண்டு. அதைத் தான் 'திரி நாடி' எனக் கூறுவர். நமது வலக் கரத்தின் மணிக்கட்டில் ஓர் அங்குலம் விட்டு மேலே தள்ளி விசை

**மருத்துவ விஞ்ஞானத்திற்கு அடிப் படையாக மருத்துவச் சோதனையில் நோயினைத் தெளிவாக உணர்த்துகின்ற ஆற்றல் ஒவ்வொருவர் உடலில் நாடித் துடிப்பே ஆகும். அதன்படி, நோய் இன்னதென்று நாடித்துடிப்பைக் கொண்டு ஆய்ந்து, நோய் தீர்க்கும் முயற்சியில், மருத்துவர் சாதனை பல நிகழ்த்தி யுள்ளனர்''**

நரம்பை நமது மூன்று விரல்களாலும் அழுத்திப் பார்க்க வீணையின் விகுவாக நமது விரல்கள் தூக்கிக் குறிப்பு காட்டும். அவ்வாறு காட்டும் குறிப்பினால் இன்ன நாடி யென அறிதல் வேண்டும். மேற்கூறிய இடத்தில் மூன்று விரல்களால் அழுத்திப் பார்க்க ஆட்காட்டி விரல் வாதம், நடுவிரல் பித்தம், மோதிர விரல் சிலேத்துமத் தையும் குறிக்கும்.

**நாடி தெரியாக் காலம்:**

எண்ணெய் தேய்த்துக் குளித்த போதும், உடல் நனைந்துள்ளபோதும், உணவு உட்கொண்ட உடனே யும், இன்ப உணர்ச்சியிலாழ்ந்துள்ள போதும், நடந்து வந்த உடனேயும், போதைப்பொருள் உட்கொண்ட போதும், விடம் அருந்திய போதும், பயமுற்றபோதும், விரதமிருந்தவர், விக்கல், வாந்திபேதி, வன்மையாக உள்ளவர்கட்கும், அடிபட்டவர், அதிர்ச்சி அடைந்தவர், மிக்க இரத்தப்போக்கு அடைந்தவர், இரத்தம் மிகவும் குறைந்து காண்பவர்கள், சுவாசத்தை அடக்குபவர் முதலியோருக்கும் நாடி எளிதில் காணவியலாது.

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ 1989-90-ஆம் ஆண்டிற்கு மட்டும் கல்விக் காக மாநில அரசு 949 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த முழுத் தொகையையும் கல்விக்காக மாநில அரசே செலவிட்டது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (22.12.90).

★ தருமபுரி மாவட்டத்தில் ரூ.20 கோடிக்கு வேளாண்மைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தருமபுரியில் தெரிவித்தார் (15.12.90)

★ தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட 31 ஆலைகளில் 19 ஆலைகள் இந்த ஆட்சியில் திறக்கப்பட்டன. தற்போது 7 ஆலைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் மதுரை யில் தெரிவித்தார் (22.12.90).



# வள்ளுவர் வழியில் பாவேந்தர்

- டாக்டர் எஸ். பத்மநாபன்

உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்குத் தந்த திருவள்ளுவர் வகுத்த வழியில் நம்மை வழி நடத்திச் சென்ற புலவர்களில் இந்த நூற்றாண்டில் தலைசிறந்து விளங்குபவர் நமது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படையில் திருக்குறளை இயற்றிய வள்ளுவர், பிச்சை யெடுத்து வாழும் வழக்கத்தை அறவே வெறுக் கிறார். தலைவிதி, தலையெழுத்து என்ற பாது காவல்களால், பிச்சையெடுக்கும் வழக்கம் வளர்ந்து வருவதைக் கடிந்துரைக்கிறார்.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்''

என்பது அவர் வாக்கு,

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத் தினை அழித்திடுவோம்'' என்ற பாரதியார் பாடலும் ''கூழுக்கு ஒருவன் அழும்படி ஆண்டிடும் கோலை முறித்திடுவோம்'' என்ற பாரதிதாசனின் பாடலும் இக்குறளின் எதிரொலிகள்தான். வள்ளுவரின் கருத்தைப் பாரதியாரும், பாரதி தாசனாரும் தங்கள் உள்ளத்திலே வாங்கி தங்களது சொற்களால் இங்கே வெளிப்படுத்துகின்றனர்.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

என்பது குறள்.

அக்குறளின் பிரதிபலிப்பு தான் ''நல்லதோர் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்'' என்ற பாரதிதாசன் பாடல்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்பது குறள். அதிகார வர்க்கங்களின் அழிவுக்கு அடிகோலும் குறள் இது.

இக்குறளின் விரிவுரைதான் கார்ல்மார்க்ஸ் எழுதிய ''கேப்பிட்டல்'' என்ற நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பொதுவுடைமைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் நமது திருவள்ளுவர். அந்தப் பொதுவுடைமைத் தத்துவத்தைத் தனது உயிரெனக் கூறுகிறார் பாரதிதாசன். ''பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப் போம், புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்'' என்பது பாரதிதாசன் கூற்று.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'' என்று வினவிய வள்ளுவரின் நாட்டில் பெண்கள் அடிமைகளாக இருப்பதைக் கண்ட பாரதிதாசன் கொதித்து எழுந்தார். ''பெண்கள் அழகிய தமிழ் நாட்டின் கண்கள்'' என்றார். ''மாதர் தம் உரிமை மறுப்பது மாண்பா? மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?'' என்ற வினாவை எழுப்பினார்.

கணவனை இழந்த ஒரு கைம்பெண்ணின் உள்ளத் துடிப்பைப் பாரதிதாசன் நமக்குப் படம் படித்துக் காட்டுகிறார்.

'எனை மணந்தார், இறந்தார்; என் குற்றமல்ல
இறந்தஉடன் மங்கலநாண், நல்லாடைகள்
புனைமலர், குங்குமம், அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?'

என்று விதவைப் பெண்ணின் உள்ளத்திலே நின்று பேசுகின்றார். அதனைத் தொடர்ந்து ''மணவாளன் இறந்தால் பின் மணத்தல்தீதோ? பாடாததேனீக்கள், உலவாத்தென்றல், பசியாத வயிறு பார்த்ததுண்டோ?'' என்றார் பாவேந்தர்.

பாரதிதாசன் கவிதைகள் தமிழனின் காதலை யும், வீரத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. பாண்டியன் பரிசில் ஒரு காட்சி. கதாநாயகன் வேலன், படைவீரர்களிடம் சிக்கிய இளவரசி அன்னத்தை மீட்டுத் தன் தாயிடம் சேர்த்து, திரும்பவும்களம் நோக்கிச் செல்கிறான். இதைக் கண்ணுற்ற அன்னம் வேலனின் தாய் ஆத்தாளிடம் ''இனியும் அவர் போர்க்களம் செல்கின்றாரே. உன் மகனது நிலை என்ன ஆகும்?'' என்று கேட்க, அந்தத் தாய் **''ஊர் மீட்க என் மகன் சாகட்டும்''** என்று கூறுகின்றாள். இதைப் படித்ததும் சங்க காலத்திலே வாழ்ந்த வீரப்பெண்கள் நம் கண் முன்னால் நிற்கின்றார்கள். ''தன் தந்தை யானைப் படையைக் கொன்று இறந்தார். நேற்றோ இவள் கணவன் களத்திலே இறந்தான். அதன் பின்னரும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்புகின்றாள் ஒரு தாய். என்னே இவள் கருதியது?'' என்று கேட்கிறார் சங்கப் புலவர் ஒக்கூர்மாசாத்தியார். அவ்வித வீர உணர்ச்சிமிக்க பெண்கள் வாழையடி வாழையாகத் தமிழ்நாட்டிலே தோன்றியுள்ளனர் என்று பாரதிதாசன் நமக்குச் சுட்டிக் காட்டு

# பார்த்தோம் படித்தோம்!




**1.12.90** இதழில் வெளிவந்த மு.விவேகானந்தனின் 'காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்' என்னும் கட்டுரை சிறப்பாக இருந்தது.

—ஏ.கந்தசுவாமி
திருப்பூர்

'பல்லக்கும் காட்டு நாயக்கன்களும்' கட்டுரை வெளியிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—தங்கராஜ் காட்டுநாயக்கன்
காஞ்சிபுரம்

வேளாண்மைப் பகுதிக்குப் பக்கங்களைக் கூட்ட வேண்டுகிறேன்.

—எம். சேகர்
கத்திரிசேரி

'மாணவர் பக்கம்' ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—சு.புஷ்பராஜன்,
மன்னார்குடி

**16.12.90** இதழில் கவிஞர் சுரதா அவர்களின் மலரும் நினைவுகள் மனத்தைத் தொட்டது.

—மு.வேதபுரி
கோட்டுப்பாக்கம்

'ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல' என்னும் கருத்தோவியம், அரிய செய்திகளை எளிதில் புரிய வைக்கிறது.

—ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி

அறிவியல் மேதை தாமஸ் ஆல்வா எடிசன் கட்டுரை (மாணவர் பக்கம்) அருமை.

—மு. கண்ணன்
குமுக்கோட்டை

---

கின்றார். இவ்வீரம் தமிழ்ப் பெண்களின் தனிக் குணம் என்னும் கருத்துப்பட ''கண்ணெடுத்தும் பார்த்தோமா? கைவாளோடு சுடும்போரில் தனியாகக் கிடந்த சேயை'' என்று ஆத்தாளின் வாயால் நமக்குக் கூறுகிறார்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

என்ற குறளின் எதிரொலியை நாம் இங்கே கேட்க முடிகிறது. ''கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, எதிரியோடு போரிட வேறு வேல் எங்கே என்று தேட, தனது மார்பிலே எறியப்பட்டிருந்த வேலைக்கண்டு அதனை விடுத்து மகிழும் வீரனை'' வள்ளுவர் நமக்குக் காட்டுகின்றார். அதே வீரனின் சாயலைப் பாரதிதாசனின் பாத்திரப் படைப்பான வேலனிடம் நாம் காண முடிகிறது.

அழகை ஆராதிப்பவன் கவிஞன். இயற்கையின் அழகை ஆதாரமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்கள் எண்ணற்றவை. ஒரு பெண்ணின் அழகைத் திருவள்ளுவர் மிகவும் அருமையாக

''அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு''

என்று பாடுகிறார். ஒருநாள் அழகுத் தெய்வம் பெண்ணின் உருவாக பாரதியார் முன்பு காட்சி அளித்ததாக அவரது பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

''மங்கியதோர் நிலவினிலே
கனவினிது கண்டேன்
வயது பதினாறிருக்கும்
இளவயது மங்கை
பொங்கி எழும் பெரு நிலவு
போன்ற வொளி முகமும்
புன்னகையின் புது நிலவும்
போற்ற வரும் தோற்றம்
துங்க மணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்
அங்கதனில் கண் விழித்தேன்
அடடாவோ; அடடா
அழகென்னும் தெய்வந்தான்
அதுவென்றே அறிந்தேன்

அழகுத் தெய்வம் பாரதியின் நெஞ்சிலே கற்பனை உருவாகத் தோன்றி எழிலூட்டுகிறார்.

பாரதிதாசனும் அழகைப் பெண்ணாகவே பார்க்கின்றார். அவரது ''அழகின் சிரிப்பு'' இயற்கையன்னைக்கோர் எழிலோவியம். அந்நூலின் தலைப்பே அவரது கற்பனையின் சிகரமாகத் திகழ்கின்றது. அழகு சிரிக்குமா? என்ற கேள்வி இங்கே எழுகின்றது. அழகு நம்மைப் பார்த்துச் சிரிக்காது. கவிஞனைக் கண்டால் சிரிக்கும். அவன் கவிதையைப் படிப்பவர், கற்பனை மனம் பெற்றால் அழகு அவர்களையும் பார்த்துச் சிரிக்கும். இயற்கையழகு அனைத்துமே சிரிக்கக் காண்கிறார் பாரதிதாசன்.

''காலையிளம் பருதியிலே அவளைக்கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேனந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடமெலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
மாலையிலே மேற்றிசையிலிலகுகின்ற
மாணிக்கச் சுடரில் அவள் இருந்தாள் ஆலஞ்
சோலையிலே கிளைதோறும் கிளிகள் கூட்டம்
தனில் அந்த ''அழகென்பாள்'' கவிதை
தந்தாள்''

அழகுக்கு அழகு சேர்த்து அதைச் சிரிக்கவும் வைத்தார், வள்ளுவர் வழி வந்த பாரதிதாசன்.

# பொங்கலோ பொங்கல்!

—கவிஞர் பல்லவன்





வழிந்திடும் வியர்வைத் துளிகளை வயலில்
விதைத்திடும் உழவர் உயரட்டும்!
வையகம் வாழ வறுமையை விரட்டி
வாழ்விக்க வந்தோர் வாழட்டும்!

தொழில்வளம் மிகுந்து தோழமை வளர்ந்து
தொழிற் சாலைகள் பெருகட்டும்!
தோள் வலிவாலே வாழ்வளிப் போரின்
துயரங்கள் தூர விலகட்டும்!

வழிவழி வந்த அறநெறி நின்று
வையகம் அன்பில் செழிக்கட்டும்!
வளர்தொழிற் கல்வி அறிவியல் சார்ந்து
வாழ்க்கைக்(கு) என்றும் உதவட்டும்!

மொழிகளில் சிறந்த மூவாத் தமிழ்மொழி
முத்தமிழ் மண்ணை ஆளட்டும்!
முப்பால் அமுதப் பொங்கலோ பொங்கல்
முயற்சி திருவினை ஆகட்டும்!



# பொங்குக பொங்கல் பொங்குகவே!

—கவிஞர் பூங்கோவன்

ஏற்றத் தாழ்வை அகற்றிடவே
இன்னல் இனியிலை என்றிடவே
ஆற்றல் கொண்டே உழைத்திடவே
அன்பைப் பெருக்கி வாழ்ந்திடவே
ஏற்றம் எதிலும் பெற்றிடவே
எண்ணும் எழுத்தும் கற்றிடவே
போற்றும் கலைகள் வளர்த்திடவே
பொங்குக பொங்கல்! பொங்குகவே!

பாரதி தாசன், அம்பேத்கர்
பாரினில் இவர்க்கெலாம் நூற்றாண்டு!
ஆரம் சூட்டி மகிழ்ந்திடவே
அண்ணா பெரியார் ராஜாஜி!
சாரதி யாகி உயர்ந்ததுபோல்
சாதி சமயச் சழக்குகளைப்
போராடி வீழ்த்திட இணைவதற்குப்
பொங்குக பொங்கல்! பொங்குகவே!





# திருவள்ளுவர் சொல்லாட்சி மாட்சி

- புலவர் கா. கோவிந்தன்

**உ**லகில் நனிமிகச் சிறிய பொருள் அறிவியல் வளராத வரை கடுகு, அறிவியல் வளர்ந்து விட்டநிலையில் அணு. அளக்கலாகா ஆழமும் பரப்பும் உடையது கடல். ஒரு கடலின் வரப்பும் ஆழமுமே அத்தகையது என்றால் ஏழுகடல்கள் ஒன்று கலந்து விட்ட நிலையில் அவற்றின் ஆழமும், பரப்பும் அம்மம்மா! எண்ணிப் பார்க்கவும் இயலாதனவாம். அவ்வேழு கடல்களையும் கடுகு ஒன்றைத் துளைத்து, அதன் அகத்தே அடக்குவது அதனினும் அணுவைத் துளைத்து, அதனகத்தே அடக்குவது அரிதினும் அரிது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

திருவள்ளுவர் இயற்றிய குறட்பா ஒவ்வொன்றின் அளவுச் சிறுமையும், அதுகூறும் பொருட் பெருமையும் அக்குறட்பாக்களை அறிந்த புலவர் பெருமக்களைக் ''கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்றும், ''அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்றும் பாராட்ட வைத்துவிட்டன.

அவ்வாறு பரந்த பொருளைச் சுருங்கிய வாய்பாட்டால் கூறுவதால் பெருமை கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், சொல் இலக்கணத்திற்கு மட்டும் ,

1) அவை அஞ்சாமை 2) அவை அறிதல் 3) இனியவை கூறல் 4) கேள்வி 5) சொல்வன்மை 6) பயனில சொல்லாமை 7) புறங்கூறாமை 8) வாய்மை என்ற அதிகாரங்களை-அதாவது, எண்பது குறட்பாக்களை ஒதுக்கியிருப்பதோடு, சொல் குறித்து, பல்வேறு இடங்களில், பல்வேறு நிலைகளில் 33 குறட்பாக்கள் யாத்துள்ளார்.

இவ்வாறு சொல்லிலக்கணத்திற்காக 113 குறட்பாக்களை- அதாவது, தம் முழுநூலின், சற்றுக் குறைய பன்னிரண்டில் ஒரு கூற்றினை ஒதுக்கியிருப்பதன் மூலம் சொற்களைத் தேர்ந்து ஆள்வதில் எத்துணை விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு வற்புறுத்தும் அவர், அவ்வழியில் சொற்களை ஆளாதிருப்பாரோ? ''ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காப் பேதையர்'' அல்லரே அவர்! ஆகவே உரைத்த வழியே சொற்களைத் தேர்ந்து ஆண்டிருப்பார்; ஆண்டுள்ளார்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் இன்ன சொல்லை எடுத்து விட்டு, அதன் இடத்தில் இன்னசொல்லைப் போட்டால் பொருத்தமாக இருக்கும் என எவரும் எண்ணவும் இயலாநிலையில், அப்படியே மாற்றிப் போட்டால், அக்குறட்பாவின் பொருட் செறிவே சீர்குலைந்து போகும் வகையில், வடித்துத் தந்துள்ளார். எடுத்துக் காட்டுக்கு ஒரு பாட்டு:

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'.

- குறள்: 69.

இக்குறட்பாவில், 'ஈன்ற, பொழுது, இன், பெரிது, உவக்கும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' எனப் பதினோரு சொற்கள் உள்ளன; இனி அவை ஒவ்வொன்றின் இயல்பினையும் ஆராய்வோம்.

**ஈன்ற:**

''நன்கலம் நன் மக்கட் பேறு'' (குறள்:60) ''அறிவறிந்த மக்கட் பேறு'' (குறள்:61) என்ற குறட்பாக்களையும் ''பேறுகாலம்'', ''பெற்றவட்கே தெரியும் பிள்ளையின் அருமை'', ''பெற்றால் தான் பிள்ளையா'' என்ற உலக வழக்கையும் கருத்தில் கொண்டு நோக்கிய வழி ''ஈன்ற'' என்ற சொல்லிற்குப் பதிலாகப் ''பெற்ற'' என்ற சொல்லைப் போட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றும், ஆனால் அதைப் போடவில்லை, காரணம்; இரு சொற்களுக்கும் உள்ள பொருள் நிலையே! ''நல்லாறு எனினும் கொளல் தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று'' என்பது (குறள்:222) ''கொள்வது தீது கொடுப்பது நன்று'' (கம்பராமாயணம்) வாணன் வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கு எழுக என்னாய்; விழுநிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்டு வையே'' (மதுரைக் காஞ்சி 203-205) ''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்''. (புறம் 182)

இச்சான்றோர் வாக்குகள், கொள்வார் சிறியர்; கொடுப்பார் பெரியர் என்பதை உறுதி செய்கின்றன. ஆகவே, பெற்ற என்ற சொல்லைப் போட்டால், தாய் சிறுமையுடையவளாகி விடுகிறாள். வள்ளுவர். அச்சிறுமையைத் தாய்க்குச் செய்ய விரும்பவில்லை. சிறுமை செய்ய விரும்பாமை மட்டுமன்று; ஈன்ற என்ற சொல்லை அமைத்ததன் மூலம் தாயின் பெருமையை மேலும் காட்டியுள்ளார். ''ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே'' (தொல். சொல். 439) என்பது தொல்காப்பியம்: அதாவது கொடுப்போர் - உயர்ந்து, கொள்வோர் தாழ்ந்த வழி; தாழ்ந்தோர் உயர்ந்தோரைப் பார்த்து ஏதேனும் கேட்குங்கால் ''ஈ'' எனக்கூறல் மரபு. ஆக ஈன்ற என்பதால், தாய் - உயர்ந்து, உலகெலாம் தாழ்ந்த நிலை உண்டாகி தாய்க்குப் பெருமை சேர்ப்பதாயிற்று. ''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது'' என்கிறார் வள்ளுவர் (68). ஆக, அவள் ஈன்ற மக்கள் அறிவால் மாபெரும் பயன் அடைந்த இம்மாநிலத்து மக்கள் எல்லாம் தாழ, அவள் உயர்ந்து விட்டாள், ''ஈன்ற'' என்ற சொல்லை ஆண்ட வள்ளுவர் துணையால்!

**பொழுது:**

''அமிழ்தினும் ஆற்ற இனிதே, தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'', ''மக்கள்

# காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள்

**மா**னுட பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிட மாய் - வாழ்க்கை வழி, நெறி முறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது நமது திருக் குறள். ''காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி உலகினில் வேறு ஏது?'' என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறை சாற்றிடலாம், அஞ்சிடத் தேவையில்லை.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'- நமது நாடு. எதனால் இப்படிக் கூறினார் பாரதியார்? அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழி யினை - வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறை தனைத் தீட்டியதால்தான்!

—பேரறிஞர் அண்ணா

மெய்தீண்டல் உடற்கின்பம்; மற்றவர் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு'' ''குழல் இனிது, யாழ்இனிதுஎன்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' (குறள்: 64, 65, 66) இக்குறட்பாக்கள் - வழி மக்கள், தம்மைப் பெற்றவர்களுக்கு எப்பொழுதெல்லாம் இன்பம் ஊட்டுவர் என்பதை விளக்கியுள்ளார் திருவள்ளுவர்.

''குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்கள் ''

என்ற புறப்பாட்டின் (188) மூலம் அம்மக்கள் மகிழ்ச்சிதரும் நிலைகளை விளக்கியுள்ளார், பாண்டியன் அறிவுடை நம்பி என்ற பாவலகாவலன்.

''பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில் இற்ற அன்றினும் எறிமழுவாளவன் இழுக்கம் உள்ள அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்'' (கம்ப. அயாத்தி: மந்திரம்: 42) என்பதன் மூலம் மக்கள் எந்நிலையி லெல்லாம் பெற்றவர்களுக்கு மகிழ்ச்சி தருவர் என்பதை விளக்கியுள்ளார் கம்பர்.

இவ்வாறு மகன் பிறந்து பெரிய வனாகும் வரையிலான அவன் வாழ்க்கை யில் நிகழும் ஒவ்வொரு சிறப்புக் கண்டும் மகிழ்பவள் தாய். அவ்வாறாகவும் ஈன்ற பொழுதைய இன்பத்தை மட்டும் தனித்துப் பிரித்துக் கூறியிருப்பானேன்? மகனைப் பெறும் வரை, அவள், அவள் பெற் றோர்க்கு மகள். அவள் கணவனுக்கு மனைவி; வாழ்க்கைத் துணை. ஆனால் மகனைப் பெற்றதும் இவை யெல்லா வற்றிலும் சிறந்த தாயாம் நிலையினை அவள் அடைகிறாள். தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மண்ணுயிர்க் கெல்லாம் இனிது என்ற வகையில் உலகம் போற்றும் ஒருவனை உலகிற்கு அளித்த பெருமைக்கு உரியவளாகி விடு கிறாள். 'மலடி மலடி என்று மாநிலத் தார் ஏசாமல், தாய் என்னும் பெருமை தனைத் தரணியில் பெற்றவளாகிறாள்.' ஆகவே ஈன்ற பொழுதைய இன்பத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் குறளாசிரியர்.

**இன்:**

இன் எனும் இடைநிலைச் சொல் காட்டிலும் எனும் பொருள் உடையது. அதை விடுத்து, '' ஈன்ற பொழுது - பெரிது உவக்கும்'' எனக் கூறியிருந்தால், மேலே கூறிய மகனின் வாழ்க்கை நிலை யில் காணலாகும் உயர்வு கண்டெல்லாம் மகிழ மாட்டாள், ஈன்ற பொழுது மட்டுமே மகிழ்வாள் எனப் பொருள் தந்து, தாய்க்குப் பெரியதொரு இழுக்கைத் தந்து விடும். அதைத் தவிர்க்க ''இன்'' இன்றியமையாது இட வேண்டியதாயிற்று.

**பெரிது:**

பெரிது என்ற இச்சொல்லை விடுத்து ''ஈன்ற பொழுதின் உவக்கும்'' என்று கூறியிருந்தால், மகன் வாழ்க்கையில் காணலாகும் பல்வேறு வளர்ச்சி நிலை யிலும் தாய் அடையும் இன்பம் அனைத்தும் ஒரு நிலையினவாம் எனப் பொருள் தந்து, ஈன்ற பொழுதைய இன்ப அளவைக் குறைத்துவிடும். அக் குறைபாட்டினைத் தவிர்த்து; அப்பொழு தொல்லாம் மகிழ்வாள். ஆனால், ஈன்ற பொழுதில் பெரிதும் உவப்பாள் என ஈன்ற பொழுதைய இன்பப் பெருக்கைத் தனியே பிரித்துக் காட்ட, ''பெரிது'' என்பது வேண்டப்பட்டதாயிற்று.

**உவக்கும்:**

மகிழும், களிக்கும் என்பன போலும் சொற்களில் யாதேனும் ஒன்றினை ஆண்டிருந்தாலும் குற்றம் இல்லை. ஆனால் உவக்கும் என்ற சொல்லைத் தேடித் தெரிந்து ஆண்டுள்ளார்.

உவகையாவது; அளவிறந்த மகிழ்ச்சி, அளவிறந்த களிப்பு, அளவிறந்த இன்பம்; நெஞ்சு நிறைந்து வழியும் மகிழ்ச்சி; களிப்பு ''மெய்ம்மலி'' உவகை (நற்: 43, குறுந்: 398, புறம்: 45) அகம்மலி உவகை (மலைபடுகடாம். 84) ''நெஞ்சமலி உவகை'' (பதிற்று: 40,26) என்ற ஆன் றோர் வாக்குகளை அறிக! ஈன்று புறம் தந்த தன்கடன்; சான்றோன் ஆக்கிய தந்தை கடன் ஆகியவற்றிற்கு ஈடாக மகன்பால் தான் எதிர்பார்த்த பெருமை யைக் காட்டிலும் மிகப் பெரும் பெருமை யைக் கண்டதனால், தாய் அடைந்த அளவிறந்த மகிழ்ச்சியை உணர்த்த வேண்டி யிருத்தலின், உவகை என்ற சொல்லை ஆங்கு இடவேண்டியதாயிற்று. ''சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே'' (புறம்:277) ''சிதைந்து வேறாகிய படு மகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனளே '' (புறம்: 278) என ஆண்டெல்லாம் கூட ''உவகை'' என்ற சொல்லையே ஆண்டி ருத்தல் காண்க.

**தன்:**

மகன்களெல்லாம் ஒரே பண்புடைய ராகி விடுவதில்லை. நாட்டவர் போற்றும் நல்லவனாகப் புகழ் பெறுவான் ஒருவன். ஊரெல்லாம் பழிக்க நன்று உள்ளக்கால் விற்றற்குரிய கயவனாகிக் கழிவன் ஒருவன்; பிறர் முன்னவனைக் காட்டி, ''இவன் யார்'' என்றவழித் ''தன் மகன்'' எனப் பெருமிதம் தோன்ற பதில் அளிப்பாள் தாய்: பின்னவனைக் காட்டிக் கேட்ட வழி ''அவன் யாவனோ? யான் அறியேன்'' என்பாள் தாய். நல்ல மகனை நாடு போற்றும்; அல்லாதவனை அவனி தூற்றும்.

''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மல் (அகம்: 66)

என நல்ல மகனைப் பெற்றவளைப் பாராட்டியதன் மூலம் அந்நல்ல மகனைப் பாராட்டியுள்ளார் புலவர் செல்லூர்க் கோசி கண்ணனார்.

தகாக் காதல் கொண்டு, தவறு செய்து

கொலையுண்டு போனான் மகன் எனக் கேட்ட சோழ மன்னன் ஒருவன்.

''மகனை முறை செய்த மன்னவன் வழி ஓர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம் செவி உறுவதன் முன்னர்
ஈங்கு இவன் தன்னையும் ஈமத்து ஏற்றுக''
- மணிமேகலை: 22-210-213.

என ஆணையிட்டான் எனவும், அம்மகன் கொலையுண்டது கேட்ட அவன் தாய் அரசமாதேவி ஆற்றாது அழுவது கண்ட ஒரு மூதாட்டி.

''தன் மகன் காத்தன்று, பிறர் மகன்
கொண்டன்று;
என் எனப்படுமோ நின் மகன் மடிந்தது?''
- மணிமேகலை (23: 17-18)

எனக் கேட்டுத் துயர் ஆற்றினாள் எனவும் கூறி, நல்லவன் அல்லாத மகனைப் பழித்துள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

பழியொடு படராமை மட்டுமன்று; புகழொடு பொலிந்தவன் மகன் ஆதல் கண்டு தன மகன் எனப் பெருமை கொள்வாள் தாய் என்பதை உணர்த்த ''தன்'' என்பது இன்றியமையாது இடப் பட வேண்டியதாயிற்று.

மேலும், பெற்ற தாயைப் பேணி வளர்க்கும் மகனும் உலகில் உள்ளான். பெற்ற தாய் மடிப்பிச்சை எடுக்க, பிறி தோரிடத்தில் பெருக வாழும் மகனும் உள்ளான். இந்த மகன், பின்னவன் போன்றவன் அல்லன். மாறாக முன்னவன் போன்றவன் என்பதை உணர்த்தவும் ''தன்'' என்பது தேவைப்பட்டது.

**மகன்:**

மேலே கூறிய அனைத்துப் பண்பு களும் - மகளுக்கும் பொருந்தாவோ? ஏன் மகளைக் கூறாது மகனைக் கூறினார்? மகனுக்கு நிகராக வளர்க்கப்பட்டாலும் பருவம் வந்துற்றதும் தக்கான் ஒருவனைத் தேடி அவனுக்கு மணம் செய்து கொடுத்து அவனோடு அவன் மனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியவள் மகள்; பெற்றோர் அனுப்பி வைக்கவில்லை என் றால், தக்கான் ஒருவனைத் தானே தேர்ந்து கொண்டு அவன் மனை சென்று வாழவேண்டியவள். மகள், பிறந்த மண்ணில் நெடிது நாள் இருக்கத் தக்கவள் அல்லள். புகுந்த வீட்டில் அவள் நடத்தும் வாழ்க்கை முறையால் பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டியவள்.

பல்லாற்றாலும் மணந்தரும் சந்தன மரம். அதை அரைத்துச் சந்தனக் குழம் பாக்கித் தம் மெய்யில் பூசிப் பயன் படுத்திக் கொள்வார்க்கல்லாது, அது மலையிடத்தே முளையிட்டு வளர்ந்தாலும் அது அம்மலைக்கு எவ்விதப் பயனையும் தராது.

# சிலப்பதிகாரம் தரும் செய்தி



| | |
|---|---|
| சூரியல் | இறஞ்சி |
| பேடகம் | வெண்பொத்தி |
| பரியட்டக்காசு | செம்பொத்தி |
| வேதங்கம் | பணிப்பொத்தி |
| புங்கர்காழகம் | கோகிலம் |
| சில்லிகை | பீதகம் |
| தூரியம் | பச்சிலை |
| பங்கம் | அரத்தம் |
| தத்தியம் | துண்டுகில் |
| வண்ணடை | சுண்ணம் |
| கவற்றுமடி | வடகம் |
| நூல்யாப்பு | பஞ்சு |
| தருக்கு | இரட்டு |
| தேவாங்கு | பாடகம் |
| பொன்னெழுத்து | கோங்கலர் |
| குச்சரி | கோபம் |
| தேவகிரி | சித்திரக்கம்மி |
| காத தூலம் | குருதி |

''என்ன சொற்கள் இவை? பழக்கத்தில் உள்ள வையாய்க் காணோமே! பொருளும் விளங்க வில்லையே'' என்று யோசிக்கிறீர்கள் அல்லவா? - அர்த்தமற்ற சொற்களல்ல அவை.

| | |
|---|---|
| சாடின் | பேடா |
| பாப்ளின் | ப்யூசி சில்க் |

இவை புரிகின்றன அல்லவா? இவை போன்று தான் அவைகளும்! துணி வகைகளின் பெயர்கள்! நாகரிக உலகிலே நடமாடுபவர்களின் நாவில் நர்த்தனமாடும் சொற்கள்! வெளிநாட்டுத் துணி வகைகளின் சொற்கள்!

அவை போன்றவைதான், முன்னாலே நாம் பொறித்திருப்பவை - ஆடைகளின் பெயர்கள்!

நம் நாட்டு ஆடைகள் பட்டாலானவை - பாண்டியனின் கொலு மண்டபத்தை அலங் கரித்தன - ரோம் நாடு வரை சென்றன.

இவ்வளவு வகையான பட்டாடைகளை இங்கு, தமிழர்கள் முன்பு தயாரித்தனர். கட்டுக்கதையல்ல- இட்டுக் கட்டியதல்ல - இலக்கிய ஆதாரம் - சிலப்பதிகாரத்திலே காணலாம் - இந்தத் தொழி லின் சிறப்பையும், தமிழரின் நாகரிகத்தையும், வாணிபத்தையும் விளக்கும் இச்செய்தியை!

—பேரறிஞர் அண்ணா



## பட்டை தீட்டிய வைரம்

**வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய, ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.**

## பேச்சினால் அல்ல

**திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்க வர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல - செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.**

தலையாய சிறப்பு வாய்ந்த வெண் முத்துக்கள், அவற்றை அணியாக்கி அணிந்து கொள்வார்க்குப் பயன்படுவ தல்லது, அவை கடலிடையே பிறப்பினும், அக்கடலுக்கு எவ்விதப் பயனையும் தருவது இல்லை.

ஏழு நரம்புகளையும் கூட்டிய வழி எழும் இனிய இசை, பாடுவோர்க்கும், அவ்விசையினைக் கேட்பார்க்கும் பயன் படுவதல்லது, அவ்விசை யாழினிடையே பிறக்கினும், அந்த யாழுக்கு யாதொரு பயனையும் அளிப்பதில்லை.

சந்தனமும், முத்தும், இசையும் போன்ற வள்தான் மகள்: புகுந்த வீட்டார்க்குப் பயன்படுவதல்லது பிறந்த வீட்டாருக்குப் பயன்படப் பண்ணுவது முறையாகாது என்கிறார், பாலை பாடிய பெருங் கடுங்கோ.

ஆகவே தான் மகளைக் கூறாது மகனைக் கூறினார் வள்ளுவர்.

**சான்றோன்:**

முடியாட்சிக் காலமாயின் வேந்தருள் வேந்தன். குடியாட்சிக் காலமாயின், குடியரசுத் தலைவர்; பெருநாட்டின் பிரதம அமைச்சர்; மாநிலமாயின் முதல் அமைச்சர்; பல்கலைக்கழகத் துணை வேந்தர்; தலைமைப் பேராசிரியர், சிறந்த மருத்துவர், சிறந்த பொருளாளர், சிறந்த வணிகர், சிறந்த தொழிலதிபர், பெரு நிலக்கிழார், சிறந்த நடிகர், சிறந்த ஆட்டக்காரர், எனப் பலநிலைப் பெரியார்கள் எல்லாம் இருக்கவும், அவர்களை விடுத்துத் தன்மகனைச் சான்றோனாம் நிலையில் வைத்தமைக்கு யாது காரணம்?

ஒரு நாட்டிற்கு இவர்கள் எல்லாம் தேவை என்றாலும், இவர்களைப் பெற்று விட்டதால் மட்டுமே ஒருநாடு நாடாகி விடாது. எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை; வாழிய நிலனே'' (புறம்: 187) என்றார் ஔவையார். ஒரு நாட்டிற்குப் படை வேண்டும். பசியார உண்ண உணவு வேண்டும். பல்வேறு அணிகலன் அளிக்கும் பொருள் வளம் வேண்டும். ஆனால் இவை மட்டும் போதா, அந்நாட்டில் சான்றோர்களும் இருத்தல் வேண்டுவது இன்றியமையாதது.

அரசர் முதல், ஆட்டக்காரன் வரை யான பல்நிலைப் பெரியார்களாக அவர்கள் இருக்கலாம். ஆனால் அவர்களை எல்லாம் மக்கட்டன்மை யுடையவர் எனக் கொண்டு விடமுடியாது: ''மக்களே போல்வர் கயவர்'' (குறள். 1071) என் றார் வள்ளுவர். அதனால் உருவ ஒற்று மையை மட்டும் கொண்டு ஒருவரை மக்கள் தன்மை வாய்ந்தவர் எனக் கொண்டு விடமுடியாது; மக்கட்டன் மையாலும் அவர்கள் நிரம்பியவராதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் மக்களாகக் கருதப்படுவர் ''உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று; வெறுத்தக்க பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு'' என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வாறெல்லாம் பெருமைப்படுத்தப் படும் அச்சான்றோர்களின் பண்புதான் என்ன? சான்றாண்மைக்குரிய பண்புகள் தாம் யாவை? சுற்றத்தார் போலும் மக்கள் மட்டுமில்லாமல், உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டல், பழிபாவங்களுக்கு அஞ்சல், எல்லோர்க் கும், எந்நேரத்திலும் அவர் விரும்புவன கொடுத்து, உறுதுணையாய் நிற்றல், நண்பர், உறவினர் போல்வாரிடத்தில் சிறிதே கண்ணோட்டம் உடையராதல், எந்நிலையிலும், தீமையிலா வாய்மையே பேசுதல், இவையே சான்றாண்மை என்ற மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்கிறார் வள்ளுவர்.

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்**''

(குறள்: 983)

தன் மகன் சான்றோன் என்றதும், அவன்பால் இத்தனை பண்புகளுமே பொருந்தி, நிறைந்து வழிகின்றன என எண்ணி எந்தத் தாய்தான் மகிழ்ந்து இறும்பூது எய்தாதிருப்பாள்?

மகன் சான்றோன் என்றதும், அத்தாய்க்கு மன நிறைவு, மன மகிழ்ச்சி தருவது பிறிதொன்றும் உளது.

மகன் தானே சான்றோனாக ஆகி விடல் இயலாது. அவனை ஒருவர் சான் றோனாக ஆக்கி இருக்க வேண்டும்; அந்த ஒருவர் யார்? அக்கடனை யார்பால் ஒப் படைத்திருக்கிறது இவ்வுலகம்? மகனை ஈன்று, அவன் உடலைப் பேணி வளர்த்துத் தன் கடமையைக் குறைவற முடித்த மன நிறைவில், பொன்முடியார் கூறுகிறார். ''சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்'' (புறம்.312) என்று மகனைச் சான்றோன் ஆக்க, தந்தை படாத பாடு பட வேண்டும். பள்ளியில் விடுத்து படிப்பறிவு கொடுத்தல் முதல், பண்பு களைப் புகட்டும் வகையான பல்வேறு கடமைகளைத் தந்தை குறைவற நிறை வேற்றினால்தான், மகன் சான்றோன் ஆதல் இயலும். அதில் அவன் சிறிது தவறினாலும் ''துள்ளித் திரிகிற காலத்து என் துடுக்கு அடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையான பாதகனே'' என அவன் மகனே அவனைப் பழிப் பான். ஆக, மகன் சான்றோன் என்றதும், 'ஈன்று புறந்தந்தது மட்டுமே நான் செய்தது! அவனைச் சான்றோன் ஆக்கிய வர் என் கணவர்' என மனநிறைவு எழ, கடமை ஆற்றிய கணவனை நினைவூட்டும் விதம் அச் சான்றோன் என்ற சொல் தான்!

**என:**

என்று சொல்ல, என்று புகழ, என்றெல்லாம் கொள்ளலாம்; இதற்கு வினைமுதல் இல்லை. சான்றோன் என்று சொன்னவர் யார்? விடை இல்லை. சொன்ன காலம் எது? விடை இல்லை; ஆக, சான்றோன் எனச் சொன்னவர் உலகத்தார் அனைவரும்; எனச் சொன்னார் என்றும் கொள்ளலாம்; எனச் சொல்

கிறார் என்றும் கொள்ளலாம். எனச் சொல்வார் என்றும் கொள்ளலாம். ஆக, வினைமுதலும், காலமும் குறியாச் சிறப்பால், உலகத்தார் அனைவரும் முக்காலத்தும் புகழ்வர் எனும் பொருள் தரும் சிறப்புடையதாகிவிட்டது ''என'' என்ற இச்சொல்.

**கேட்ட:**

''பெண் இயல்பால் தானாக அறியாமையின் கேட்டதாய்'' எனக் கூறினார் என்பது பரிமேலழகர் கூறும் காரணம். இது கற்கும் உரிமை மகளிர்க்கு மறுக்கப்பட்ட காலத்துக் கொள்கை விளக்கம். அது இப்போது எடுபடாது. தன் மகன் சான்றோன் என்பதைத் தாய் அறிவாள். ஆயினும், ''என் மகன் சான்றோன்'' எனக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ள எந்தத் தாயும் விரும்ப மாட்டாள். இது பண்புடைமையும் ஆகாது. தன் மகன் சான்றோன் என்பதைப் பிறர் எல்லாம் ஏன், தன் பகைவர்களும் கூட - கூறக் கேட்ட வழி மகிழ்வதே பண்புடைமை யாகும். ''மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை. திறமான புலமை எனில், பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்றார் பாரதியார். பாரதியார் புகட்டிய அவ்வறிவுரையை ஏற்றவள் அத்தாய். ஆகவே தான், பிறர் புகழக் கேட்டு மகிழ்ந்தாள்.

''கேட்டதாய்'' என்பதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை அளித்த விளக்கம், போற்றுதற்கு உரியது; அவர் விளக்கம் வருமாறு: ஒரு தாய்; ஆண்டு முதுமையின் எல்லைக்கே சென்றுவிட்டவள். நடமாட இயலாது. மகன் தன் சான்றாண்மையைக் காட்டும் மேடைக்குச் செல்ல இயலாது. கண், பார்வை இழந்து விட்டது. அக்காட்சியைக் காண முடியாது. காதும் சரியாகக் கேட்கவில்லை. ஆக, வீட்டோடு, படுத்த படுக்கையாக வீழ்ந்து கிடக்கிறாள். இந்நிலையில் சிலர் வந்து அவள் மகனின் சான்றாண்மையின் பெருமையை அவள் காது கேட்க உரத்த குரலில் கூறினார்கள்; அது கேட்ட அந்நிலையில் அவள் உடலில் புதுத்தெம்பு பிறந்துவிட்டது. மகனைப் பெற்ற இளமைத் துடிப்பு உண்டாகி விட்டது. மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டாள் அத்தாய். - இது அண்ணா அவர்கள் அளித்த விளக்கம்.

**தாய்:**

மகனைச் சான்றோன் எனப் பிறர் புகழக் கேட்ட தந்தைக்கு மகிழ்ச்சி வராதா? தாய்க்கு மட்டும் தான் மகிழ்ச்சி வருமா? தந்தைக்கும் வரும், ஆனால் அவன் மகிழ்வதில், அத்தந்தைக்குப் பெருமை இல்லை. காரணம் மகனைச் சான்றோன் ஆக்கியதே அவன் தான். ஆக, தன் கடமை கண்டு தானே மகிழ்வது பண்பாகாது. ஆகவே தான் தந்தை மகிழவிடவில்லை வள்ளுவர்; அம்மகிழ்ச்சியைத் தாய்க்கே உரிமையாக்கி உயர்ந்து விட்டார் வள்ளுவர்.

# பொங்கல் உறுதிமொழி

பி.வி.கிரி



'பொங்கலோ பொங்கலென்று
பூரிக்கும் நாமெல்லாம்
தங்குக அமைதியெனத்
தரணியில் வாழ்ந்திடுவோம்!

வன்முறை என்பதெல்லாம்
வாழ்வில் கறைசேர்க்கும்!
நன்முறை என்பதுவோ
நம்மையே கரைசேர்க்கும்!

ஏடுகளில் எழுதுவது
இதயத்தைத் தொடவேண்டும்!
மேடைகளில் முழங்குவது
மேன்மையைத் தரவேண்டும்!

பெண்கல்வி வளரவேண்டும்!
பெற்றோர் எல்லாம்
முன்மாதிரி இருத்தல்வேண்டும்
முன்னேறும் சமுதாயம்!

எண்ணங்கள் இமயம்போல்
எடுப்பாய் வளரவேண்டும்!
வண்ணங்கள் வாழ்வில்சேர
வாழ்த்துக்கள் கூறவேண்டும்!

புத்தரிசி, புதுப்பானை
புத்தாடை என்பதோடு
புத்துலகம் படைத்திடவே
புதுஉறுதியும் எடுப்போமே!



# இந்தியக் கைவினைப் பொருட்கள் கலை விழா!

‘இந்தியாவிற்கு வருகை தாருங்கள்’ ஆண்டை முன்னிட்டு, இந்தியக் கைவினைப் பொருட்கள் கலை விழாவின் தொடக்க விழா 5.1.’91 அன்று நடந்தது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

12 நாட்கள் நடந்த இக்காட்சியை, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) நடத்தியது.

இந்தக் கண்காட்சியில் தமிழகம் உட்பட, புதுடெல்லி, உத்திரப்பிரதேசம், பீகார், அசாம், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் கண்கவர் கலைப் பொருட்கள் இடம் பெற்றிருந்தன.

இக்கண்காட்சியில் உலோகத்தினால் ஆன கலைப்பொருட்கள், பிரம்பு, மூங்கிலாலான கைவினைப் பொருட்கள், கையினால் பின்னப்பட்ட கம்பளங்கள், கடைசல் பொருட்கள், காகிதக்கூழ் பொருட்கள், கைவேலைப்பாடு கொண்ட துணி வகைகள், ஆபரணங்கள், மெழுகு வளையல்கள், பித்தளை, வெண்கலத்தினாலான பொருட்கள், கல்லினால் ஆன கைவினைப் பொருட்கள், மரம், செம்பு மற்றும் தக்கையினாலான பொம்மைகள், தோல் பொருட்கள் மற்றும் பல கைவினைப் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

எல்லா மாநிலக் கலைப் பொருட்களும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாட்டையும் உணர்த்தியது.

‘பூம்புகார்’ என்னும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தமிழக அரசினால் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கைவினைத் தொழில்களை எல்லா வகையிலும் வளர்த்தல், ஊக்குவித்தல், கைவினைஞர்களுக்கு எல்லா வகையான உதவிகள் அளித்தல், கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல் முதலியன இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இந்நிறுவனத்தின் சார்பில் 21 விற்பனை நிலையங்கள் உள்ளன. தமிழகம் உட்பட வெளி மாநிலங்களான பெங்களூர், கல்கத்தா, புதுடெல்லி ஆகிய இடங்களிலும் இந்நிலையங்கள் உள்ளன. மேலும், இந்நிறுவனம் தமிழகமெங்கும் உலோகம், சந்தன மரம், காகிதக்கூழ், பிரம்பு ஆகிய பொருட்களின் மூலம் உற்பத்தி செய்யும் 10 உற்பத்தி நிலையங்களையும் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் (1989-90) இந்நிறுவனம், ரூ.466.48 இலட்சத்திற்குக் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. இந்த விற்பனையில் ரூ.15.84 இலட்சத்திற்கான கைவினைப் பொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும் இந்நிறுவனம், கடந்த ஆண்டு ரூ.112.97 இலட்சம் அளவிற்கு உற்பத்தி நிலையங்கள் மூலம்

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது.

இந்நிறுவனம் கடந்த ஆண்டில் 75 கண்காட்சிகளை நடத்தி, அவற்றின் மூலம் ரூ.124.43 இலட்சங்கள் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. கடந்த நிதி ஆண்டில் இந்நிறுவனம், ரூ.13.50 இலட்சம் நிகர இலாபம் ஈட்டிச் சாதனை புரிந்துள்ளது.

இந்த நிதி ஆண்டில், நவம்பர் மாதம் வரை ரூ.17.79 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டு முடிவில் இந்நிறுவனம் ரூ.525 இலட்சங்களுக்கு விற்பனையையும், ரூ.125 இலட்சத்திற்குக் கைவினைப் பொருட்கள் உற்பத்தியையும் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிதியாண்டில் இந்நிறுவனம், திருப்பதி கோவிலிலுள்ள கருட மண்டபத்திற்குத் தங்கத் தகடு வேயும் வேலையும், பாண்டிச்சேரியில் உள்ள மணக்குள விநாயகர் கோவிலுக்கு வெள்ளி இரதமும், கர்நாடக மாநில பெல்லாரி பொதுப்பணித் துறைக்கு வெண்கலத்திலான அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலையும், திருச்சி திருவெள்ளாறையிலுள்ள புண்டரீகாட்சப் பெருமாள் கோவிலுக்கு மரத்தேர் வேலையும், பல கோவில்களுக்குக் கொடி மரங்கள் செய்யும் வேலைகளும், பித்தளை உண்டியல்களும், மரக் கதவுகளும், இராமேஸ்வரம் கோவிலுக்கு 2-ஆம் பிராகாரக்கட்டுமானப் பணியும், ஆந்திராவிலுள்ள அன்னாவரக் கோவிலுக்குப் பித்தளை வளைவுக் கம்பிகள் வேலையும், ஸ்ரீகாளாஸ்திரி கோவிலுக்குப் பித்தளைக் கம்பி வேலைகளும் ஆக மொத்தம் ரூ.55.30 இலட்ச மதிப்பீட்டில் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ,அவை நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனம், மூன்று தங்க இரதமும், இரண்டு வெள்ளி இரதமும் உருவாக்கி வருகிறது. உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவிலுள்ள ஒரு கோவிலுக்கு, கல் சம்பந்தப்பட்ட வேலைகளும், இராமேஸ்வரத்தில் அம்பாள் மண்டபக் கட்டுமானப் பணியும் நடைபெற்று வருகிறது. இவற்றின் மதிப்பு ரூ.137.00 இலட்சம்.

இந்நிறுவனம், தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களையும், பிற மாநிலத்தின் கைவினைப் பொருட்களையும் மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்குடன் அவ்வப்போது கண்காட்சிகளை நடத்துகிறது.

—நமது செய்தியாளர்

### செங்கை-அண்ணா மாவட்டத்தில்:

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

செங்கை-அண்ணா மாவட்டம் வாலாசாபாத்தில் வசிக்கும் திருமதி நூருன்னிசா என்பவரின் கணவர் திரு அப்துல் மூவாப் ஒரு மன நோயாளி. இரண்டு குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் ஏழு நபர்களைக் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய நிலைமை பெற்ற தாயுள்ளம் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் வசதியாக வாழ்ந்த குடும்பம் - எப்போது கணவன் மன நோயால் பாதிக்கப்பட்டாரோ, அப்போதிருந்தே வறுமையின் பிடியில் சிக்கியது குடும்பம். குடியிருக்க வீடு இல்லாமல் போய்விட்டது. இவர்கள் நிலைமை கண்டு பரிதாபப்பட்டவர்கள், தர்காவிற்குச் சொந்தமான வீட்டில் தினம் ரூ.2 வாடகையில் குடியமர்த்தினார்கள்.

இவரது மூத்த மகன் ஒரு மெக்கானிக். இவரது வருமானத்தில் குடும்பம் நடந்து கொண்டிருந்த போது, லாரி விபத்து ஒன்றில் அவர் இறந்து போகவே வேதனைக் கடலில் மூழ்கினாள் தாய்.

திருமதி நூருன்னிசாவின் இளைய மகள் பர்ஹானா பேகம் (வயது-25) பத்தாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். தம்பி, தங்கை ஆகியோர் சோடாக் கடையில் வேலை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஜீவனம் நடந்து வந்தது. மகளுக்குத் திருமண வயது கடந்தும் பணவசதி இல்லாததால், பெற்றோரால் திருமணம் செய்து வைக்க முடியவில்லை.

செங்கை-அண்ணா மாவட்டம் வாலாசாபாத்தில் உள்ள திருமதி நூருன்னிசா அவர்கள் குடும்பத்தைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:

''என்னுடைய கணவர், தொழுகைக்கு மசூதி போனபோது, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி செய்வதாகப் பத்திரிகையில் வந்த செய்தியை ஒருவர் படித்துக் காண்பித்தாராம். அந்தப் பேப்பரை அப்படியே வாங்கி வந்து, என்னிடம் கொடுத்தார். நான் மகள் பர்ஹானா பேகத்திடம் கொடுத்து மீண்டும் படிக்கச் சொன்னோம். பின்பு, நானும் என் கணவரும் ஊராட்சி ஒன்றிய ஆபீசுக்குப் போய், முழு விவரம் கேட்டோம். என் மகள் வாழ்விற்கு, ஓர் நம்பிக்கை ஏற்பட்டு, மோட்டார் மெக்கானிக் வகியுல்லா என்பவரை மாப்பிள்ளை பார்த்து, தந்தை பெரியார் பிறந்த தினமான 17.9.89-இல் வாலாசாபாத் மசூதியில் திருமணம் நடத்தினோம்''

குடும்பப் பாரத்தை ஏற்ற தாய் திருமதி நூருன்னிசா மேலும் கூறுகையில், ''அரசு கொடுத்த ஐயாயிரம் ரூபாயில், பித்தளைச் சாமான்கள் ரூ.2,000-க்கு வாங்கினோம். மீதிப் பணத்தைத் திருமணச் செலவிற்கு வைத்துக் கொண்டோம். அரசாங்கம் உதவி செய்யலேன்னா, என் மகள் கல்யாணமே நடந்திருக்காது. அரசாங்கத்திற்கும், தமிழக முதல்வர் கலைஞருக்கும் என்றென்றும் நாங்கள் நன்றிக் கடன் பட்டுள்ளோம்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

**தகவல்:**

**—ப.நாராயணமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கை-அண்ணா மாவட்டம்**



# கண்கள் இரண்டையும் கதிரவனாக்கு

— கவியரசர் இளந்தேவன்

தெற்கு நோக்கிக் கதிரவன் வந்தான்
தென்னவர் நெஞ்சம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது!
புற்கள் கூடத் தமிழ்மணம் வீசின!
பொங்கலின் நெய்மணம் புவியெலாம் கமழ்ந்தது!

கரும்பிலே இயற்கை ஊற்றிய சாற்றைக்
கடைவாய்ப் பற்கள் பிழிந்து தருகையில்
இரும்பிலே செய்த சிலைகளின் வாயிலும்
எச்சிலின் ஊற்றுக் கண்கள் திறந்தன!

தைமகள் மஞ்சளும் இஞ்சியும் ஏந்தித்
தமிழ்மகள் வாசலில் காத்திருக் கின்றாள்!
மைவிழிக் கன்னியர் மலரிதழ் குவித்து
மங்கலப் பொங்கலை வாழ்த்துகின் றார்கள்!

விண்ணிலே கதிர்வலம் வருவது இயற்கை
வீட்டிலும் கூட்டிலும் கதிர்வர வேண்டும்!
கண்கள் இரண்டையும் கதிரவ னாக்கு!
காற்று வெளியெலாம் ஒளிமய மாக்கு!







# பசுமை சேர்க்கும் பொங்கல்

புலவர் தமிழ்ப்பித்தன்

மார்கழிப் பனியை நீக்கி
மாண்பினைக் கொடுக்கும் தையாள்
ஊர்வலம் வந்தாள்; மக்கள்
உலவிட வனப்பம் தந்தாள்!
பேர், புகழ் அனைத்தும் இங்கே
பெருகியே நிறையச் செய்தாள்
ஏர்தரும் உழைப்பைக் கொண்டு
இன்பமே விளைத்தாள் மெய்யாய்

உலகினை வாழச் செய்யும்
உழவனே உயர்ந்தோன் ஆவான்
நிலவிடும் பசியின் துன்பம்
நீக்குவோன் அவனே யன்றோ?
குலவிடும் பசுமை எல்லாம்
குலுங்கியே பொலியச் செய்யும்
உழவினை வாழ்த்திப் போற்ற
உதித்ததே பொங்கல் நாளாம்

கதிர்மணி இலையில் வைத்து
கன்னலை அருகே வைத்து
புதியதோர் பானை ஏற்றி
புத்தரிசி வெல்லம் இட்டு
சதிர்புரி வளையல் கொஞ்சும்
தளிர்க்கர மடவார் எல்லாம்
நதியெனப் பொங்கல் செய்வர்
நன்றியை உழவர்க் கீவர்

பொங்கலின் இனிமை எல்லாம்
பொங்கிடும் சிறுவர் நாவில்
பொங்கலின் பெருமை எல்லாம்
புரிந்திடும் நமது பண்பில்
திங்களில் ஒளியைச் சேர்க்கும்
செங்கதிர் போலத் தோன்றி
பொங்கலில் பசுமை சேர்க்கும்
உழவரைப் போற்றல் வேண்டும்.



## பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

# வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து தனியாகப்பிரிக்கப்பட்டு, 1985-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தின் மொத்த சாகுபடிப் பரப்பளவு சுமார் நான்கு இலட்சம் எக்டேர் ஆகும். ஆண்டு தோறும் சராசரியாக 1,30,000 எக்டேர் பரப்பு மட்டும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நிரந்தரமான நீர்ப்பாசன வசதியில்லாததே இக்குறைவான சாகுபடி பரப்புக்குக் காரணமாகும். இம்மாவட்டத்தின் சராசரி ஆண்டு மழையளவு 880 மி.மீ. ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளாக மழையளவு குறைவாகவே கிடைத்துள்ளது. இம்மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் மூலமே அதிகமான மழை கிடைக்கிறது. நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்திக் குறியீடாக 2.70 இலட்சம் மெட்ரிக் டன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### தீவிர சாகுபடித் திட்டம்

உணவுதானியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உணவு உற்பத்தியினை அதிகப்படுத்த கூடுதலான பரப்பினைச் சாகுபடிக்குத் திட்டமிடுதல், உற்பத்தியினை அதிகரிக்க நவீன விவசாயத் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலமாக்குதல் ஆகியவை இத்திட்டத்தில் முக்கியமாகச் செய்யப்படும் பணிகளாகும்.

### உயர் விளைச்சல் ரகத் திட்டம்

இது உணவு உற்பத்தியினைப் பெருக்க உயர் விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்யும் திட்டமாகும். உயர் விளைச்சல் ரகங்களை அதிக அளவில் சாகுபடி செய்ய விதைகள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### விதைப்பெருக்குத் திட்டத்திற்குப் பெரும் நிதி

உயர் விளைச்சல் ரகப் பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்காக உற்பத்தி செய்து இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 750 மெட்ரிக் டன் அளவு பயறுவகை விதைகளும், 20 குவிண்டால் அளவு பருத்திவிதைகளும் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த ஆண்டு விநியோகத்திற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளின் வயல்களிலேயே விதைப் பண்ணைகள் அமைத்து தரமான விதைகளைக் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் 22.16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

### பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள்:

இத்திட்டத்தில் பயிர்களின் உற்பத்தி, மகசூலைக் குறைக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தத் தேவையான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு முழு விலையிலும், மானிய விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் தரமான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு ரூ.20 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

### உர உபயோகத்தை அதிகரித்தல்

பயிர் உற்பத்தியைப் பெருக்க இரசாயன உரங்கள் பெரும் உதவி

யாக உள்ளன. தற்போது வெளியிடப்படும் உயர் விளைச்சல் ரகங்கள் அதிக உரங்களை எடுத்து உபயோகித்து, அதிக விளைச்சல் தரும் குணங்கள் கொண்டவை. நமது விவசாயிகளிடையே இரசாயன உரங்கள் உபயோகிப்பது பழக்கமாகிவிட்டதொரு தொழில் நுட்பமாகும். இருந்தபோதிலும் விவசாயிகள் பயிருக்குத் தேவையான உரங்களைத் தேவையான அளவில் தேவையான பயிர் வளர்ச்சிக் கட்டத்தில் இடுவது முக்கியமானதாகும். விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள், அரசு நிர்ணயிக்கும் விலையில் கிடைக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.இந்த ஆண்டில் 6,000 மெட்ரிக் டன் அளவு தழைச்சத்து, 1650 மெட்ரிக் டன் அளவு மணிச்சத்து மற்றும் 915 மெட்ரிக் டன் அளவு சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தழைச்சத்தை பூமியில் நிலை நிறுத்தி, விவசாயிகளின் உரச் செலவைக் குறைக்கும் உயிர் உரங்களான 'அசோஸ்பைரில்லம்' மற்றும் 'ரைசோபியம்' பாக்டீரியா நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.இந்த ஆண்டு 30,000 எண்கள் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களும், 14,400 எண்கள் ரைசோபியம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களும் விநியோகம் செய்யப்படும்.

விவசாயிகள் தங்களது வயல்களின் மண்ணைப் பரிசோதனை செய்து மண்ணில் இருக்கும் உரச் சத்துக்களின் அளவையறிந்து பயிருக்குத் தேவையான உரங்களை இட மண்பரிசோதனை செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் இந்த ஆண்டு 8,900 மண்மாதிரிகள் ஆய்வு செய்து ஆய்வு முடிவுப்படி விவசாயிகளுக்கு உரப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கம்போஸ்ட் உரக்குழிகள் அமைத்து இயற்கை உரங்களை உபயோகிக்கவும் முனைப்பு இயக்கம் நடத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு 'ஊட்டமேற்றிய தொழு உரம்' தயாரிப்பு சம்பந்தமான முன் பருவக் கூட்டங்கள் நடத்திச் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 6,000 எக்டேர் பகுதியில் 'ஊட்டமேற்றிய தொழுஉரம்' தயார் செய்து விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

**ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாடு**

இம்மாவட்டத்தில் மானாவாரி நிலப்பயிர்களின் மகசூலைப் பெருக்கவும், மானாவாரி நிலங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தவும், மானாவாரி விவசாயம் செய்யும் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தவும் உருவாக்கப்பட்ட திட்டமே ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ஐந்து மானாவாரி சாகுபடி மையங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மையத்திலும் 100 எக்டேர் வீதம் மொத்தம் 500 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மானாவாரியில் மகசூலைப் பெருக்குவதற்குத் தேவையான அனைத்துத் தொழில்நுட்பங்களும் இந்த மையங்களில் செயல்விளக்கம் மற்றும் நிரூபணங்களாகச் செய்து காண்பிக்கப்படும். தொழில்நுட்பங்களை எல்லா விவசாயிகளும் கடைப்பிடித்துப் பயன்பெறுவதற்கு ஊக்கத் தொகையாக மானியமும் வழங்கப்படுகிறது.



1. கோடை உழவு செய்தல்
2. ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்துப் பயன்படுத்துதல்
3. இருபோகப் பயிர்ச் சாகுபடி செய்தல்
4. தீவனப் பயிர்ச் சாகுபடி செய்தல்
5. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செய்தல்
6. தழைச்சத்து மேலுரமிடல்

ஆகிய தொழில்நுட்பங்களில் இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகளுக்கும் பயிற்சியளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தினை அருகிலுள்ள பிற விவசாயிகளுக்கு விளம்பரப்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. ஒரு எக்டேர் பரப்புக்கு ரூ.500 என்ற அளவில் மொத்தம் 2,5 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்கு அரசு நிதிஉதவி ஒதுக்கீடு செய்துள்ளது.

**வேளாண் காடுகள் திட்டம்**

இம்மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களிலிருந்து வருமானம் கிடைக்க மரம் வளர்ப்புத் திட்டம் பெரிய அளவில் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மைத்துறையின் மூலம் நடப்பு ஆண்டில் உழவர் நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்பட்ட 4 இலட்சம் மரக் கன்றுகளும், 10,000 பழக்கன்றுகளும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென இம்மாவட்டத்திலுள்ள 6 வேளாண் கோட்டங்களிலும் மொத்தம் 56 கிசான் மரக்கன்று நாற்றங்கால் அமைக்கப்பட்டு, கன்றுகள் தயார் செய்யப்பட்டு, விநியோகிக்கத் தயாராக உள்ளன. இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகட்கு ஒரு நாள் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் 3.34 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வளரும் வேளாண்மை

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் புகையானின் பெருக்கம் தோன்ற வாய்ப்புள்ளது. புகையானைக் கட்டுப்படுத்த உழவியல் முறைகளையும், பூச்சி எதிர்ப்பு இரகங்களையும், பூச்சிகொல்லிகளையும் உபயோகித்து வருகிறோம். ஆனாலும், புகையானின் தாக்குதல் குறைந்தபாடில்லை. எனவே, புகையான்களை உண்டு, பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளை அடிக்காமல் வயலில் வளர விடுவது மேலும் நன்மை பயக்கும்.

நெற்பயிரைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான, பச்சைத் தத்துப் பூச்சிகள், வெண்முதுகுத் தத்துப் பூச்சிகள், மற்றும் புகையான்களை உண்ணும் எதிரிகளுள் சிர்டோரைஸ் லிவிடிபென்னிஸ் என்னும் பச்சைநிற மிரிட் நாவாய்ப் பூச்சிகள் முதன்மையானவை. இப்பூச்சிகள் ஊன் உண்ணி வகையைச் சேர்ந்தவை. இவைகள் பெரும்பாலும் புகையான்களின் முட்டைகளையே உண்ணுகின்றன. இம்மிரிட் நாவாய்ப் பூச்சிகள் இளம் பச்சை நிறத்தில் கரிய தலையுடன் காணப்படும். இறக்கையின் பாதிப் பாகம் கண்ணாடி போன்று நிறமற்றதாக இருக்கும். முழுநிலைப் பருவமானது முழுவதும் பச்சையாகக் காணப்படும். இதன் முட்டைப்பருவம், இளநிலைப்பருவம் முறையே 8,12 நாட்கள் ஆகும். இதன் வளர்ச்சிப் பருவத்தில் ஐந்து நிலைகள் காணப்படுகின்றன. வளர்ந்த தாய்ப் பூச்சியானது 10 நாட்கள் ஆண் பூச்சிகள் 7 நாட்கள் உயிர்வாழும். ஒரு நாவாய்ப் பூச்சியானது தனது வாழ்நாளில் சுமார் 27 முட்டைகளை இடும். சராசரியாக மிரிட் நாவாய்ப் பூச்சிகள் நாள் ஒன்றுக்குப் புகையான்களின் ஒன்பது முட்டைகளையோ அல்லது 6 முதல் நிலை இளம் குஞ்சுகளையோ அல்லது ஒரு புகையானையோ உண்ணும் திறன் வாய்ந்தவை. பொதுவாக, புகையானின் பெருக்கம் அதிகமாக இருக்கும்பொழுது நாவாய்ப் பூச்சிகளின் எண்ணிக்கையும் அதிக அளவில் காணப்படும். இந்த இயற்கை எதிரியைப் பாதுகாக்க விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தும், பொருளாதாரச் சேதநிலை எட்டிய பின்னர் மருந்தடித்தும், நன்மை செய்யும் பூச்சியினங்களைப் பாதிக்காத மருந்துகளைத் தெரிந்தெடுத்து அவற்றை மாற்று வரிசையில் (Strip Spraying) பயிரில் உபயோகித்து இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கலாம்.

**வேளாண் தகவல் பணிமையம்,**
**தமிழ்நாடு ஜ.டி.நாயுடு**
**வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை.**

மேலும் 1987-88 மற்றும் 1989-90-ஆம் ஆண்டு இத்திட்டத்தில் விநியோகம் செய்து நடவு செய்யப்பட்டு, நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டுப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ள மரக்கன்று ஒன்றுக்கு ரூ.2.50 என்ற அளவுப்படி ஊக்கத்தொகையும் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் நடப்பு ஆண்டில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

இம்மாவட்டத்தில் காளையார் கோவில், இளையான்குடி, தேவகோட்டை, கண்ணங்குடி, கல்லல் மற்றும் சிங்கம்புணரி ஆகிய ஆறு வட்டாரங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் மானாவாரி நில மேம்பாட்டிற்காக, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப்பணிகள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படும் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் -

ஆழ உழவு செய்தல் - (900 எக்டேர்)
மானாவாரி தொழில்நுட்ப நிரூபணங்கள் அமைத்தல் - (900 எக்டேர்)
வெட்டிவேர் தாவரத்தடுப்பு அமைத்தல் (125 எக்டேர்)

ஆகிய மூன்று பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான இடங்களில் வெட்டிவேர் நாற்றங்கால் தயார் செய்யப்பட்டு, கன்றுகள் விநியோகிக்கத் தயார் நிலையில் உள்ளன.

இத்திட்டத்திற்கென அரசு 9.25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**கரும்புச் சாகுபடியில் சாதனை:**

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் கரும்புச் சாகுபடியில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சராசரி 4,000 எக்டேர் நிலப்பரப்பில் தற்போது கரும்புச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மானாமதுரை வட்டம் திருப்புவனம் ஒன்றியப் பகுதிகளில் அதிக அளவில் கரும்புச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திருப்புவனம் ஒன்றியம் கிளாதரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரிய கருப்பன் என்ற விவசாயி, 1989-90-ஆம் ஆண்டில் கோ.க.671 கரும்பு பயிரிட்டு ஏக்கருக்கு 57 டன் கரும்புச் சாகுபடி செய்து, இந்திய அளவிலேயே சாதனை படைத்துள்ளார். மாநில அளவில் கரும்பு உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 40 டன்னும், இந்திய அளவில் ஒரு ஏக்கருக்கு 20 டன்னும் உற்பத்தி இலக்கு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த இலக்கினை முறியடிக்கும் வகையில் விவசாயி திரு. பெரியகருப்பன் என்பவர் சாதனை புரிந்துள்ளார். அவர், 'வேளாண்மைத்துறை அலுவலர்கள் குறிப்பிட்ட காலத்தில் வழங்கிய தொழில்நுட்பப் பரிந்துரைகள், கம்போஸ்ட் உரங்களை இரசாயன உரங்கள் இடும்பொழுது சேர்த்து இட்டது, சரியானமுறையில் நீர்நிர்வாகம் செய்தது, பரிந்துரையின்படி உரஉபயோகம் செய்தது, கரும்பில் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தியது போன்ற வழிமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றியதே இந்தச் சிறந்த சாகுபடிக்குக் காரணமாகும்' எனத் தெரிவித்தார்.

**–ந. பாலையா,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் தேவர்**
**திருமகன் மாவட்டம்.**

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

## தொழில் வளர்ச்சி

பெரியார் மாவட்டம் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திலிருந்து 17.9.1979 முதலாகத் தனியாகப் பிரிக்கப்பட்டு தனித்து இயங்கி வருகிறது. தனியாகப் பிரிக்கப்பட்டபொழுது, இம்மாவட்டத்தில் 8 பெருந் தொழிலகங்களும், 650 பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களும் இயங்கி வந்தன.

தனித்து இயங்கத் தொடங்கிய தன் காரணமாக, பெரியார் மாவட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு முடிய 19 பெரிய தொழிலகங்களும், 6,017 பதிவு செய்யப்பட்ட நிரந்தரச் சிறு தொழிலகங்களும் இயங்கி வருகின்றன.

சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் தொழிலகம் ஆரம்பித்த பின்பு, நிரந்தரச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 1989-90-ஆம் ஆண்டில் குறியீடான 2300-க்கு எதிராக, 2757 தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**சுயவேலைவாய்ப்புத் திட்டம்:**

1983-84-ஆம் ஆண்டு முதல், படித்த வேலையற்ற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பள்ளியிறுதித் தேர்வில் தேறிய 18 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் கடன் பெறத் தகுதி பெற்றவர்கள். இத்திட்டத்தின் கீழ், 1989-90-ஆம் ஆண்டில் 289 நபர்களுக்கு 45.97 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**கைவினைத் தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள்:**

இம்மாவட்டத்திலுள்ள கைவினைத் தொழில்கள் மற்றும் குடிசைத் தொழிலகங்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளைப் பெறுவதற்கும், வங்கிக் கடன் பெறுவதற்கும் ஏதுவாகக் கைவினைத் தொழில் பதிவுச் சான்றிதழ்களும், குடிசைத் தொழில் பதிவுச் சான்றிதழ்களும் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

கைவினைத் தொழில் பதிவில் குறியீடு 300 நபர்கள்; 326 நபர்கள் கைவினைத் தொழிலில் பதிவு பெற்றனர். குடிசைத் தொழில் பதிவில் குறியீடு 250 நபர்கள்; 269 நபர்கள் தொழிலில் பதிவு பெற்றனர்.

**சிறப்புப் பல்நோக்குத் திட்டம்:**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் பயன் அடைய வேண்டும் என்னும் சிறப்புப் பல்நோக்குத் திட்டத்தின் கீழ், 15 நபர்களுக்கு ரூ.60,000 கடன் தொகை வழங்க 1989-90-ஆம் ஆண்டில் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 16 ஆதி திராவிட இன மக்களுக்கு ரூ.2.71 இலட்சம் இவ்வலுவகத்தின் மூலம் கடன் வழங்கி சாதனை புரியப்பட்டுள்ளது.

**கிராமப்புறத் தொழில் கடன் திட்டம்:**

கிராமப்புறங்களில் தொழில் ஆரம்பிப்பவர்களில் விளிம்புத் தொகை செலுத்த இயலாதவர்களுக்குக் கடனுதவி புரிய வேண்டுமென இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ.41.5 இலட்சமும், 17 நபர்கள் கடன் பெறும் பொருட்டு விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**இதர கடனுதவிகள்:**

1989-90-ஆம் ஆண்டு வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், 16 நபர்களுக்கு ரூ.39.70 இலட்சம் கடன் உதவி வழங்கக் கோரி வங்கிகளுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

**கிராமப்புறக் கைவினைஞர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டம்:**

கிராமப்புறங்களிலுள்ள கைவினைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், தங்களுடைய வேலைத் திறனை மேம்படுத்துவதற்கெனவும், கிராமப்புறக் கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ், பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் ரூ.8,000 வழங்கப்பட்டுள்ளது.

**நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டம்:**

நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ், 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ.35,000 விளிம்புத் தொகை வழங்க, குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அத்தொகை 3 நிறுவனங்களுக்கு விளிம்புத் தொகை உதவியாக வழங்கப்பட்டது.

**விற்பனை வரிக் கடன்:**

விற்பனை வரியை அதிகமாகச் செலுத்தும் தொழிலகங்களுக்கு ஒரு சலுகை வழங்கும் திட்டமாக, வட்டியில்லா விற்பனை வரிக்கடன் என்னும் ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ.8.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மேற்படி திட்டம் 9.5.88-க்குப் பின்பாக ஆரம்பிக்கப்படும் தொழிலகங்கள் அதிகச் சலுகை பெறுவதற்கென விற்பனை வரியைப் பின்பு செலுத்தும் திட்டமாக மாறுபடுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு விற்பனை வரியைப் பின்பு செலுத்தலாம் எனத் தகுதிச் சான்றிதழ் ரூ.5,01,499-க்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாநில முதலீட்டு மானியம்:**

19.8.89-ஆம் தேதி முதல் பெரியார் மாவட்டத்திலுள்ள காங்கேயம், தாராபுரம், பெருந்துறை, சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம் முதலான வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாகத் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வட்டங்களில் ஆரம்பிக்கப்படும் சிறு தொழிலகங்களின் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டடம், இயந்திரங்கள்) 15 சதவிகிதம் மானியமாகப் பெறலாம். மேற்காணும் திட்டத்தின் கீழ் 4 தொழிலகங்களுக்கு முதலீட்டு மானியமாக ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4 தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள அனைத்துச் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி ஆரம்பித்து, 3 மாதங்களுக்குள் மின்சார மானியம் பெறுவதற்கென மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக மானியமாக முதல் ஆண்டு 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதம் வழங்கப்படுகிறது. சிறு தொழிலகங்கள் மின் வாரியத்திற்கு மின் கட்டணத்தைச் செலுத்திவிட்டு, ஆண்டுக்கு இரண்டுமுறை மின்சார மானியம் பெறுவதற்கென விண்ணப்பிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.1.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை 45 தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**சிறந்த தொழிலகங்களுக்கான பரிசுகள்:**

மாநில அரசு 1986-ஆம் ஆண்டு முதல், சிறந்த சிறுதொழிலகங்களுக்கு மாநில, மாவட்ட அளவிலான பரிசுகளை வழங்கி வருகிறது.


**தமிழரசு**

**சந்தா விவரம்**

**தமிழ்**
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

**ஆங்கிலம்**
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு**
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.


## நிவாரண உதவித் திட்டங்கள்

**வ**றுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள, குறைந்த வருமானம் பெறும் ஏழை மக்களின் துயர் துடைக்கப் பல்வேறு நிவாரண உதவித் திட்டங்கள் பெரியார் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நலிந்தோர் குடும்பநலத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர் இறந்துவிட்டால், அவருடைய ஆண்டு வருமானம் ரூ.5,000/-க்குள் இருப்பின் அக்குடும்பத்திற்கு ரூ.3,000/- நிவாரண நிதியாக அளிக்கப்படுகிறது. இத்திட்டம் கடந்த 1989-90-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. நலிவுற்ற குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்க அரசால் மிகவும் எளிய முறையில் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், அந்தச் செய்தியைக் கிராம நிர்வாக அலுவலரிடம் தெரிவித்துக் கிராமத்தில் அவரிடமே நிவாரணத் தொகை கோரி விண்ணப்பத்தைக் கொடுத்துவிடலாம்.

அதை அவர் நில வருவாய் ஆய்வாளரின் பரிந்துரையுடன் அந்த வட்டத்தில் பணிபுரியும் துயர் நிவாரணத் திட்ட வட்டாட்சியரிடம் சேர்ப்பித்த பின், மனுவை ஆய்வு செய்து, அக்குடும்பத்திற்கு ரூ. 3,000/- நிவாரணத் தொகையாக வழங்குவார். இந்தத் திட்டம் மக்களிடையே நன்கு பிரபலமடைந்து வருகிறது. கடந்த 6 மாதங்களில் மட்டும் பெரியார் மாவட்டத்தில் 491 குடும்பங்களுக்கு இதுவரை ரூ.14,73,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்.**

விபத்தினால், வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும் கடந்த 1977-ஆம் ஆண்டிலிருந்து அரசின் பல துறைகளின் மூலமாகப் பல்வேறு வழிகளில் விபத்து நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வந்தன. நிவாரண உதவிகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரியவர்களுக்குக் கிடைக்காமல் காலதாமதமானதாகத் தெரிந்தபின், நிவாரண உதவிகள் எளிதில் கிடைக்கும் வண்ணம் விதிகளைத் தளர்த்தி, 23.5.89ஆம் தேதியிலிருந்து மக்களிடம் அனைத்து வகைகளிலும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள வருவாய்த் துறையின் மூலம், விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி கிடைக்க வழிசெய்து, விபத்து நிவாரணத் திட்டம் பற்றிய அரசு ஆணை வெளியிடப்பட்டது.

இதன் மூலம், விபத்தால் மரணம் ஏற்படுமாயின் அல்லது இரு அங்கங்களை இழந்தால் ரூ.10 ஆயிரமும், ஒரு அங்கத்தை இழந்தால் ரூ.7 ஆயிரமும், இதர ஊனத்தின் தன்மை சதவீதத்திற்கு ஏற்ப ரூ.5,000/-மும், வன விலங்குகளால் தாக்கப்படுவதற்கு ரூபாய் ஆயிரமும் நிவாரண உதவித் தொகைகளாக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. சாக்கடைகள் சுத்தம் செய்தல், வயல்

களில் பூச்சி மருந்து, இரசாயணப் பொருட்கள் தெளித்தல், குடிநீர் விவசாயக் கிணறுகள் ஆழப் படுத்துதல் மற்றும் வெட்டுதல், மண் சரிந்து விழுதல், பனை, தென்னை மரங்களில் ஏறுதல், வயல்கள் தோட்டங்களில் பணிபுரியும் போது விஷப்பாம்பு மற்றும் விஷப்பூச்சிகள் கடித்தல், கட்டிட விபத்து, வன விலங்குகளினால் தாக்கப்படுதல் ஆகிய பல்வேறு விபத்துகள் ஏற் பட்டால் நிவாரண உதவிகள் கிடைக்கும்.

இத்தகைய விபத்துகளில் சாக்கடை சுத்தம் செய்யும் உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள், வயல்களில் பூச்சி மருந்துகள், இரசாயனப் பொருட்கள் தெளிப்போர், கிணறு வெட்டும் தொழிலாளர், பனை, தென்னை மரம் ஏறுவோர், விவசாயத் தொழி லாளர்கள், சிறு மற்றும் சொற்ப நிலமுள்ள விவசாயிகள், கிராமக் கொல்லர், சம்மட்டி அடிப்பவர், பொன், வெள்ளி நகை கொல்லர், உலோக வடிவமைப்பாளர், மிருகங் களை நடத்துபவர் மற்றும் மிருகங் களினால் இழுக்கும் வண்டி ஓட்டுநர், கூடை முடைபவர், கல் வெட்டி எடுப்பவர், வடிவமைப்பாளர், செங்கல் சூளைத்தொழிலாளி, டிரக் ஓட்டுபவர், ஆட்டோ ரிக்ஷா ஓட்டு பவர், தனியார் வாகனம், வாடகைச் சீருந்து, பேருந்து ஓட்டுநர், மீனவர் (கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தின ராக இல்லாதவர்) மரத்திலிருந்து பதனீர் இறக்குபவர், நாவிதர், வண்டி இழுப்பவர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் கைத்தறி நெசவாளர்கள், மண்பாண்டம் செய்யும் தொழிலாளி, வீடுகளில் பணிபுரிவோர், பாம்பு பிடிக்கும் தொழிலை நம்பியிருப் போர் மற்றும் திரைப்படம் தயாரிக் கப்படும் சமயத்தில் விபத்தின் காரண மாக மரணமடையும் திரைப்படத் தொழிலாளி ஆகியோர் விபத்து நிவாரணம் பெறத் தகுதியுள்ள வர்கள் ஆவார்கள்.

பெரியார் மாவட்டத்தில் காங் கேயம் வட்டம், பச்சாபாளையத்தில் பனைமரம் ஏறும்போது தவறி விழுந்து மரணமடைந்த மரமேறும் ஏழைத் தொழிலாளி திரு. சேமலை நாடார், குன்னத்தூருக்குச் சென்று கொண்டிருந்த போது லாரி கவிழ்ந்து விபத்தினால் மரணமடைந்த கோபி வட்டம், வீரபாண்டி கிராமம், நாய்க்கன் காட்டைச் சேர்ந்த லாரி டிரைவர், பெருந்துறை வட்டத்தில் பசுவ பட்டி கிராமத்தில் தென்னை மரம் ஏறி பதனீர் இறக்கச் சென்றபோது தவறி விழுந்து மரணமடைந்த ஏழை மரம் ஏறும் தொழிலாளி திரு. பழனிசாமி, பவானி வட்டத்தில் விவசாயக் கூலி வேலை செய்தபொழுது விஷ நாகத் தால் தீண்டப்பட்டு மரணமடைந்த சுலோசனா ஆகியவர்களின் குடும் பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் வீதம் நிவாரணத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பெரியார் மாவட்டத்தில் 18 நபர்கள் பயன டைந்துள்ளனர். இவர்களுக்கு வழங் கப்பட்ட நிவாரண நிதித் தொகை ரூ.1,65,000/- ஆகும்.

பெரியார் மாவட்டத்தின் தலை நகராகிய ஈரோட்டில் சாஸ்திரி நகரில் முடிதிருத்தும் தொழிலாளி திரு. கணேசன், தனது மகள் கனிமொழி புஷ்பவதியானதால் சீர் செய்யத்தெரிந்தவர்களிடம் கடன் பெற்று வரும் ஒரே நோக்கத்துடன் சைக்கிளில் வேகமாக 'கேட்' இல்லாத ஈரோடு-சேலம்-ரெயில் பாதையைக் கடக்கும் சமயத்தில் 'கொச்சின் எக்ஸ்பிரஸ்' மோதிய தால் அவ்விடத்திலேயே விபத் தினால் மரணமடைந்தார். ஆதர வற்ற மனைவி தென்னாட்டரசி குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரம் நிவாரண நிதியுதவி அளிக்கப்பட்டது.

சத்தியமங்கலம் வட்டம் நல்லூர் கிராமத்தில் வசிக்கும் ஏழை அரிசன விவசாயக் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்த திரு. ராமன், தனது அன்பு மகனிடம் வேலைக்குப் போய் வருகிறேன் என்று கூறி விட்டுச் சென்றவர் கதிர் மிஷினில் கதிர் அடித்துக் கொண்டிருக்கும் போது மின்சாரம் தாக்கி இறந்து விட்டார். அவர் குடும்பத்திற்கு நிவாரணத் திட்டத்தின் மூலம் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேலும் பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை 7,350 நபர்களுக்கும், ஊனமுற்றோர் உதவித் தொகை 1,018 நபர் களுக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித் தொகை 1,708 நபர் களுக்கும், ஆதரவற்ற விதவைகள் உதவித்தொகை 4,413 பேர்களுக் கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித் தொகை 790 நபர்களுக்கும் வழங்கப்பட்டது. இத் திட்டத்திற்கு இதுவரை ரூ.7,63,950/- செலவினம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

**—இரா.பா.கார்மேகம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

## அரசின் அறிவிப்புகள்–ஆக்கப் பணிகள்

★ தருமபுரி மாவட்டத்தில், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற 28 ஆயிரத்து 572 பேர்கள் வாங்கிய 10 கோடியே 54 இலட்சம் ரூபாயும் நாட்டுடைமையாக் கப்பட்ட வங்கிகளில் 10 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 20 கோடியே 54 இலட்சம் ரூபாய் வேளாண்மைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் அறிவித்தார் (15.12.90).

★ தமிழக அரசுக்குச் சொந்தமான 16 போக்கு வரத்துக் கழக 1,05,000 ஊழியர்களுக்கும் போனஸ் மற்றும் கருணைத் தொகை மொத்தமாக ரூ.20 கோடியே 18 இலட்சம் வழங்கப்படும். கடந்த ஆண்டைவிட ரூ.4 கோடி கூடுதல் செலவில் குறைந்தபட்ச கருணைத்தொகை ரூ.600 லிருந்து ரூ.675 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் 1 இலட்சத்து 5 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெறுவர் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (5.10.90)

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
## உரங்கள்




**மதராஸ்**
**பெர்ட்டிலைசர்ஸ்**
**லிமிடெட்**

VIJAY

HTA 7343

# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித்திட்டம்**

**இ**த்திட்டத்தின்படி, 8-ஆம் வகுப்பு வரை படித்த, ஆண்டு வருமானம் ரூ.5,000-க்குக் குறைவாக உள்ள ஏழைப் பெண்களுக்குத் **திருமண உதவித் தொகை ரூ.5,000 வழங்கப்படுகிறது. இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு 1,320 நபர்களுக்கு ரூ.66,00,000; இதில் இதுவரை 1,265 நபர்களுக்கு ரூ.63,25,000 உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.**

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், 8 மாதம் உள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்குக் குடும்ப அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டு வருமானம் ரூ.5,400-க்குக் கீழ் உள்ளவர்களுக்கு ரூ.200 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.25,00,000; இதில் இதுவரை 12,312 நபர்களுக்கு உதவித் தொகையாக ரூ.24,62,400 வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்க உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், விதவையை மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு, தம்பதியர் பெயரில் உதவித் தொகை ரூ.5,000 ஆறாண்டுத் தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.25,000 முழுவதுமாகச் செலவிடப்பட்டு 5 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**விதவை மகள் திருமண உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் ரூ.6,400-க்குள் உள்ள ஆதரவற்ற விதவைகளின் மகள் திருமணத்திற்கு ரூ.2,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஒதுக்கீடு ரூ.1,30,000; இதுவரை 56 நபர்களுக்கு உதவித் தொகையாக ரூ.1,12,000 வழங்கப்பட்டுள்ளது.

**ஊனமுற்றோருக்கான வங்கிக்கடன் மானயம் வழங்கும் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், உடல் **ஊனமுற்ற-ஆண்டு** வருமானம் ரூ,6,400- க்குக் குறைவாக உள்ள நபர்களுக்கு வங்கி மூலம் கடன் **பெற்றுத் தந்து கடன் தொகையில் 3-இல் 1 பங்கு** மானியமாக வழங்கப் **படுகிறது. இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு ரூ.65,100; இதுவரையில் 48** நபர்களுக்கு மானியத் தொகையாக ரூ.44,820 வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் பெட்டிக்கடை மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூ.10,000; இதுவரை 18 நபர்களுக்கு ரூ.9,000 மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக உடல் ஊனமுற்றோர்களுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப் பட்டுள்ள தொகை ரூ.24,000; இதுவரை 20 நபர்களுக்கு ரூ.10,000 வழங்கப்பட்டுள்ளது.

ஆபரேஷன் போலியோ திட்டத்தின் கீழ், இவ்வாண்டு, அண்ணா கிராமம், கோலியனூர் மற்றும் செஞ்சி ஊராட்சி ஒன்றியங்களில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப் பட்டவர்கள் 954 பேர் கண்டறியப் பட்டுள்ளனர். இதில் இதுவரை 26 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சையும், 20 நபர்களுக்கு உடற்பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன. 30 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டியும், இருவருக்குச் சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளன.



உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 87 வண்டிகளில் இதுவரை 65 நபர்களுக்கு வண்டி வழங்கப்பட்டுள்ளது. இதர மீதி பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அரசு ஆதரவற்றோர் பராமரிப்புப் பள்ளியில் 248 சிறுவர் சிறுமியர்களும் (ஒதுக்கீடு 250 எண்ணிக்கை), அரசு பார்வையற்றோர் பள்ளியில் 44 சிறுவர் சிறுமியர்களும் (ஒதுக்கீடு எண்ணிக்கை 50), அரசு காது கேளாதோர் பள்ளியில் 70 குழந்தைகளும் (ஒதுக்கீடு எண்ணிக்கை 70) தங்கிப் படித்து வருகிறார்கள்.

கடலூர் சேவை இல்லத்தில் பல்வேறுபட்ட பிரிவுகளில் - 18 முதல் 40 வயதுப் பிரிவில் - 185 பெண்கள் (விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள்) தங்கிப் பயின்று வருகின்றனர். அரசுப் பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். இவ்வாண்டு செயலகப் பிரிவில் சேருவதற்கான **விண்ணப்பம்** தற்சமயம் **வரவேற்கப்படுகிறது. இலவச உணவு, உறைவிடம், தேர்ச்சி பெற்றோருக்குப் பணி வாய்ப்பு அனைத்தினையும் தமிழக அரசு வழங்குகிறது.**

**தென்னார்க்காடு மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள குடிநீர்த் திட்டப் பணிகள்:**

**ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள்:**

(1,4,90-இன் மறு ஆய்வின் படி), இம்மாவட்டத்தில் மொத்தம் 5,184 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 1,890 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்று உள்ளன. மீதமுள்ள 3,294 முழுமையாகக் குடிநீர் வசதி பெறாத குடி



**பாவேந்தர் நூற்றாண்டு**

**சாதி என்னும் தாழ்ந்தபடி**
**நமக்கெல்லாம் தள்ளுபடி;**
**சேதி அப்படி தெரிந்து படி**
**தீமை வந்திடுமே மறுபடி - நூலைப்படி!**

யிருப்புகளில் 296 குடியிருப்பு களுக்கு இந்த ஆண்டு குடிநீர் வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 390 நீர் ஆதாரமற்ற குடியிருப்புகளுக்குக் குறைந்தது ஓர் நீர் ஆதாரம் என்ற அடிப்படையில் நீர் ஆதாரம் வழங்கப்பட்டுள்ளது. **இவற்றுள், இவ்வாண்டில் 31.10.90 முடிய 158 குடியிருப்புகளுக்கு ரூ.424.94 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள் ளது. இதன்மூலம் இந்த நிதி ஆண்டில் 1,37,600 மக்கள் பயன் அடைந்து உள்ளனர்.**

இவற்றில் 70 ஆதிதிராவிடர் குடியிப்புகளுக்கு இவ்வாண்டில் 31.10.90 வரை குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. இது தவிர கடந்த ஆண்டில் (89-90) 200 மக்கள் தொகை அல்லது 40 குடும்பங் களுக்கு மேல் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு கையிறைப் பான் போடும் திட்டத்தின் கீழ் 76 குடியிருப்புகளுக்கும், இந்த ஆண்டில் 8 குடியிருப்புகளுக்கும் ரூ.10 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. மேலும், காமராசர் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் சென்ற ஆண்டில் (1989-90) 50 குடியிருப்புகளுக்கும், இந்த ஆண்டில் 7 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள நீரை நல்ல நீராக மாற்றும் திட்டத்தின் கீழ் 7 இடங்களில் இயந்திரங்கள் பொருத்தத் திட்டமிடப்பட்டு, 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற் கான திட்ட மதிப்பு ரூ.105.26 இலட்சங்கள்.

1. குமராட்சி ஒன்றியத்தில் திட்டம் முடிந்து பயனில் உள்ள இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நாஞ்சனூர் | ரூ.13.89 இலட்சம் |
| உசப்பூர் | ரூ.14.19 இலட்சம் |
| பரிவிளாகம் | ரூ.12.19 இலட்சம் |
| வெல்லூர் மெயின் | ரூ.12.07 இலட்சம் |
| கூத்தன் கோயில் | ரூ.7.62 இலட்சம் |

**பணிகள் நடைபெறும் இடம்:**

நடுத்திட்டு ரூ.9.33 இலட்சம்

2. பரங்கிப்பேட்டை ஒன்றியத் தில் திட்டம் முடிந்து பயனில் உள்ள இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ராதாவிளாகம் | ரூ.10.85 இலட்சம் |
| பள்ளிப்படை | ரூ.13.39 இலட்சம் |

**பணிகள் நடைபெறும் இடம்:**

ராமநாதன்குப்பம் ரூ.11.73 இலட்சம்

மேலும் உப்புநீரை நல்ல நீராக மாற்றும் நடமாடும் இயந்திரத்தின் மூலம் ரூ.10 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப்பட உள்ளது.

நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் முதல் கட்டமாக 150 ஆழ்துளைக் கிணறு களும், இரண்டாம் கட்டமாக 91 ஆழ்துளைக் கிணறுகளும் ரூ.60.25 இலட்சம் செலவில் அமைக்க ஒப் புதல் அளிக்கப்பட்டுள்ளது. **இவற்றுள் 31.10.90 முடிய 226 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள் ளன. மீதமுள்ள அனைத்துப் பணி களும் நவம்பர் 1990-க்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.**

3,000 மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டங் களின் கீழ் மொத்தம் 47 குடியிருப்பு களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணியின் கீழ் இந்த ஆண்டு 41 குடியிருப்புகளுக்கு ரூ.252.65 இலட்சம் செலவில் கட்டித்தர ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மேலும் டேனிடா உதவியுடன் பரங்கிப்பேட்டை மற்றும் மரக் காணம் ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நிரந்தர நீர் ஆதாரம் பெற்று குடிநீர் திட்டம்/கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணிகளுக்கு ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங் கப்பட உள்ளன. இதற்கான டேனிஷ் அரசின் உதவி ரூ.240 இலட்சம் பெறப்பட்டு இத்திட்டத்தினை 3 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும் வறட்சி மிகுந்த ஊராட்சி ஒன்றியங்களில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நகரக் குடிநீர்த் திட்டங்கள்:**

இம்மாவட்டத்தில் நெய்வேலி நகரியம் நீங்கலாக 7 நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும், 24 ஊரகப் பேரூராட்சிகளும், ஒரு நகரப் பேரூராட்சி நகரியமும் ஆக 39 நகரங்கள் அடங்கி உள்ளன.

இவற்றில் ஏற்கனவே 7 நக ராட்சிகள், 5 பேரூராட்சிகள், 7 ஊரகப் பேரூராட்சிகள் (ஆக 19 நகரங்களுக்கு) ரூ.512.22 இலட்சம் செலவில் 5,17,000 மக்கள் பயன் பெறும் வகையில் குடிநீர்த் திட் டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் ரூ.772.88 இலட்சம் மதிப்பீட்டில் 10 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டமும், ரூ.287.811 இலட்சம் மதிப்பீட்டில் 3 நகரங் களுக்கு மேம்பாட்டுத் திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன. **இத் துடன் 5 ஊரகப் பேரூராட்சிகளுக்கு உலக வங்கியின் உதவியுடன் குடி நீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.**

மேலும் ஒரு நகரப் பேரூராட்சி, மூன்று ஊரகப் பேரூராட்சிகள், ஒரு நகரியம் ஆகியவற்றில் குடிநீர்த்திட்ட ஆய்வுப் பணிகளும், ஒரு நகராட்சி, ஒரு நகரப் பேரூராட்சி, இரண்டு ஊரகப் பேரூராட்சி ஆகியவற்றில் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிக் கான ஆய்வுகளும் நடைபெற்று வரு கின்றன.

இது தவிர, விழுப்புரம் நகராட்சி களுக்குப் பாதாளச்சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வை. புண்ணியமூர்த்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்**



# சென்னைக் குடிநீர் வாரியத்தின் சீரிய பணிகள்

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்**

**டாக்டர் பொன்முடி**

இந்தியாவின் முதன்மை வாய்ந்த நகரங்களுள் நான்காவது இடம் வகிப்பது சென்னை மாநகரம். இந்நகரின் வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கேற்ப, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் ஆகிய இரு பணிகளையும் செம்மையுடன் செய்திடும் வகையில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் என்ற தனியமைப்பு, சட்டப்படி நிறுவப் பெற்று, கடந்த பன்னிரண்டு ஆண்டு களாக வளர்ச்சி அடைந்துள்ளது.

'சென்னைக் குடிநீர் வாரியம்' என்று சுருக்க மாக அழைக்கப்படும் இவ்வாரியம் தன் பத் தாண்டுக் காலப் பணியை முடித்த நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சி மீண்டும் மலர்ந்தது.

மாமழை காணாது வாடிய பயிராக, மாநகரம் இருந்த போது, வறட்சித் தடுப்புப் பணியில் சென்னைக் குடிநீர் வாரியம் ஈடுபட்டிருந்த நேரம் அது. இருப்பினும், இயற்கையால் விளைந்த அவலத்தை மக்கள் அறியாவண்ணம் அவர் களுக்குச் சிக்கனமாகக் குடிநீரைப் பயன்படுத்தும் பக்குவத்தைச் சென்னைக் குடிநீர் வாரியம் செய லாற்றுவதற்குரிய எல்லாப் பொறுப்புகளையும் சுமக்கும் நிலை தமிழக அரசின் புதிய அமைச்சர வையைச் சார்ந்தது. இதற்காக, நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, போர்க்கால அடிப்படையில், சென்னைக் குடிநீர் வாரியத்தினால் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பெற்றன.

வறட்சித் தடுப்புப் பணிகளில் முறைகேடுகள் நிகழாவண்ணம், லாரிகளில் குடிநீர் பகிர்ந்தளிப்பு முறைக்குரிய வழித்தடங்களுக்குரிய வாடகைச் செலவினை சீரமைக்கப்பட்டதை முதலில் குறிப் பிட வேண்டும்.

**வறட்சி நிலை:**

குடிநீர் அமைப்பினில் தொடர்ந்து அபிவிருத் திகள் செய்த போதிலும், 1987-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் மூன்று நீர்த் தேக்கங்களும் முழுமையாக வறண்டு விட்டன. நிலத்தடிநீர்ப் படுகைகளிலுள்ள நிலத்தடி நீர் கொண்டு 1987-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதியிலிருந்து அரசு ஆணைக்கேற்ப, சென்னை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

> “மக்களின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளாகிய சென்னை நகரின், அனைத்துச் சட்டப்பேரவை உறுப் பினர்களையும் மாதந்தோறும் மூன்றாவது வேலைநாளில் சென்னைக் குடிநீர் வாரியத் தலைவரும், பிற அலுவலர்களும் சந்திக்கின்றனர். இதன் முதற்கூட்டத்தை 19.4.1990-ல் முன்னின்று தொடங்கி வைத்தது, வாரியத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிவகுப்பதாய் அமைந் துள்ளது. மாதமொருமுறை மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி, அவர்களின் கருத்தறிந்து, உடனுக்குடன் குறை களை நிவர்த்திக்கும் முறை சென்னைக் குடிநீர் வாரிய வரலாறு இதுவரை காணாத ஒன்றாகும்.”



தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டப் பணிகளை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.4.90 அன்று தொடங்கி வைத்தார்.

அதனுடன் ஊர்திகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் 88,89-ஆம் ஆண்டுகளிலும் பருவமழை போதுமான அளவுக்குப் பெய்யாததால், தமிழக அரசுக்கு வறட்சிநிலையைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அரசால் ஒரு கணிசமான தொகை மானியமாகக் குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டது. **குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் டாங்கர் ஊர்திகளை 87-88, 88-89-ஆம் ஆண்டுகளைவிட, குறைந்த வாடகைக்கு அமர்த்தி (87-88 ஒரு நடைக்கு ரூ.195-, 88-89 ரூ.167-, 89-90 ரூ.130-) குடிநீர் விநியோகம் செய்ததன் மூலம் மாதமொன்றுக்கு ரூ.16.69 இலட்சம் வீதம் 9 மாதங்களில் ரூபாய் 1.50 கோடி மிச்சப்படுத்தப்பட்டது.** கூடுதல் தண்ணீர்த் தேவைகளைக் கருதி 710 ஆழ்துளைக் கிணறுகள் (இந்தியா மார்க்- 2 பம்புகள்) போடப்பட்டு 1990-91-ஆம் ஆண்டில் 350 டாங்கர் ஊர்திகளையும், 50 டிராக்டர்களையும் வாடகைக்கு அமர்த்தி குடிநீர் வழங்கல் கூடுதலாக்கப்பட்டது. வடகிழக்குப் பருவமழை துவங்கி, பெய்த மழையினால் 19.10.90 அன்று 550 மில்லியன் கன அடியாக இருந்த நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 7.12.90 அன்று 4022 மில்லியன் கன அடியாக அதிகரித்துள்ளது. ஆரணியாற்றின் வெள்ளப் பெருக்கினைக் கொடுதலையாற்றிற்குத் திருப்பியதும் இந்தக் கொள்ளளவின் அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகும்.

வறட்சி காரணமாகக் கடந்த மூன்றாண்டுகளாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு ஓரளவு போதுமான மழை பெய்ததனால், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளின் நீர்க் கொள்ளளவு அதிகரித்ததால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, 9.11.90 முதல் தினந்தோறும் குடிநீர் வழங்க உத்தர விட்டார்கள். தினந்தோறும் குடிநீர் தொடர்ந்து வழங்கும் முறை, பொங்கல் திருநாள் வரை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது, குடிநீர்த் தேக்கங்களின் கொள்ளளவு மற்றும் குடிநீர் வழங்கும் நிலை பற்றி மறு பரிசீலனை செய்து, சென்னை நகருக்குத் தினந்தோறும் குடிநீர் தொடர்ந்து வழங்குவது குறித்து, பின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும். **நாள்தோறும் குடிநீர் வழங்க ஆரம்பித்ததிலிருந்து தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் பகுதிகள் 1210-லிருந்து 268-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.** இந்தப் பகுதிகளில் குடிநீர் வழங்க 150 வாடகை டாங்கர் ஊர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் செயல்படுத்தப்பட்ட பிறகு வாடகை ஊர்திகளின் எண்ணிக்கை மேலும் குறையும்.

**சட்டமன்ற உறுப்பினர்களுடன் மாதாந்திரக் கூட்டம்**

சென்னைப் பெருநகர மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒரு சேவை நிறுவனமாகச் சென்னைக் குடிநீர் வாரியம் அமைந்துள்ளதால், குடிநீர் வாரியத்தின் பணிகளைக் குறிப்பிட்ட இலக்கில் கொஞ்சமும் தொய்வின்றி நிறைவேற்றிட, மக்கள் தொடர்புப் பணியில் கவனம் செலுத்துவது தலையாய கடமையாகிறது.

மக்களின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதி



களாகிய - சென்னை நகரின் - அனைத்துச் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் மாதந்தோறும் மூன்றாவது வேலை நாளில் சென்னைக் குடிநீர் வாரியத்தலைவரும் பிற அலுவலர்களும் சந்திக் கின்றனர். இதன் முதற் கூட்டத்தை 19.4.90-இல் முன்னின்று தொடங்கி வைத்தது, வாரியத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிவகுப்பதாய் அமைந்துள்ளது. **மாதமொருமுறை மக்கள் பிரதி நிதிகளைக் கூட்டி, அவர்களின் கருத்தறிந்து, உடனுக்குடன் குறைகளை நிவர்த்திக்கும் முறை, சென்னைக் குடிநீர் வாரிய வரலாறு இதுவரை காணாத ஒன்றாகும்.**

இக்கூட்டத்தில் சென்னைக் குடிநீர் வாரியம், தங்கள் தொகுதியின் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் மேம்பாட்டிற்கு ஆற்ற வேண்டிய பல் வேறு பணிகளைச் சட்டப்பேரவை உறுப்பினர்களும், அவர்களது பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டு கின்றனர். கூட்டத்தில் எழுப்பப்பெறும் பிரச்னைகள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கை, உடனுக்குடன், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு, மக்களின் குறைகள் களையப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரைப் பகுதி வாரியாகத் தூய்மைப்படுத்தும் தீவிரத் திட்டம் 16.6.90-இல் தொடங்கப்பெற்று, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப்பணியில், சென்னைக் குடிநீர் வாரியமும் சென்னை மாநகராட்சியும் இணைந்து கோட்டங்கள் தோறும், மழைநீர் வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கதாகும்.

**மக்களின் பிரதிநிதிகளாகிய சென்னை நகரின் 12 தொகுதிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்களை, மாதந்தோறும் 3-வது வேலை நாளில், சென்னைக் குடிநீர் வாரியத் தலைவரும் பிற அலுவலர்களும் சந்திக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களுடனான முதல் கூட்டத்தை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார் (19.4.90)**



**1989-ஆம் ஆண்டு வறட்சிப் பணிகளுக்காக அரசு ரூ.736.11 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்ததில், கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன.**

| பணியின் பெயர் | செலவு (ரூ. இலட்சங்கள்) |
|---|---|
| 1. புதிய இந்தியா மார்க் பம்புகள் 835 அமைத்தல் ... | 148.93 |
| 2. புதிய குடிநீர்த் தொட்டிகள் 200 அமைத்தல் ... | 16.90 |
| 3. குடிநீர் வழங்க 250 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் செப்டம்பர் வரையிலும், அக்டோபர் முதல் 350 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் வாடகைக்கு அமர்த்துதல் ... | 490.64 |
| 4. செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து பம்புகள் மூலம் நீர் இறைத்தல் ... | 7.25 |
| 5. செங்குன்றம் ஏரியில் நீர் ஆவியாதலைத் தடுத்தல் ... | 16.73 |
| 6. தனியார் கிணறுகளை வாடகைக்கு அமர்த்துதல் ... | 1.65 |
| 7. இந்தியா மார்க்-2 பம்புகள் பழுது பார்த்தல் ... | 10.33 |
| 8. இரும்புத் தொட்டிகளைப் பழுது பார்த்தல் ... | 10.38 |

மக்களின் வசதிக்காக வீதிகளில் நிறுவப்பட்டிருக்கும் பொதுக்குழாய்கள், இந்தியா மார்க்-2 பம்புகள், கைப்பம்புகள் முதலியவற்றிற்குரிய வடிகால்களை அமைத்து அவற்றைச் சரிவர இயங்கச் செய்வதன் வாயிலாக, வீதிகளில் நீர் தேங்காமலும், அதனால் கொசு உற்பத்திக்கு இடமின்றி மலேரியா காய்ச்சல் தடுப்புப் பணியை ஆற்றி மக்கள் நல்வாழ்வைக் காத்தலும் சாத்தியமாகிறது. மழைநீர் கால்வாய்களில் தூர்ந்துள்ள வண்டல், சேறு, சகதி முதலியவற்றைச் சென்னைக் குடிநீர் வாரியமும் சென்னை மாநகராட்சி ஊழியர்களும் இணைந்து அகற்றி அப்புறப்படுத்தியதன் வாயிலாகக் கடந்த மழைக் காலத்தில், வெள்ளம் போல் வீதிகளில் நீர் தேங்குவது பெருமளவு தவிர்க்கப்பட்டது.

**உலக வங்கித் திட்டம்**

இருக்கும் நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்துவதுடன், நீண்டகாலத் திட்டங்களையும் உலக வங்கியின் நிதியுதவியுடன், சென்னைக் குடிநீர் வாரியம் நிறைவேற்றி வருகின்றது.

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஆதாரங்களை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு ரூ.150.80 கோடி மதிப்பில் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. நிலத்தடி நீர்ப்புலங்கள் ஏற்கெனவே அமைக்கபட்டு இயங்கி வருகின்றன. ஆரணி ஆற்றில் ஒரு அணைக்கட்டு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வெள்ளத் தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிந்தபின் மேலும் 47 மி.லிட்டர் நீர் நாள்தோறும் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் குடிநீரின் விநியோக அளவு நாளொன்றுக்கு 395 மி. லிட்டருக்கு உயரும்.

**கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்**

சென்னை நகரில் வளர்ந்து வரும் மக்கட் தொகை, அருகில் உள்ள எல்லாவித நீர் ஆதாரங்களையும் ஏற்கெனவே பயனுக்குக் கொண்டு வந்தது, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் மூலம் சென்னை நகருக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்க ஒரு முடிவு எடுத்தது. இதனைத் தொடர்ந்து தெலுங்கு கங்கை திட்டத்தினைப் பற்றித் தமிழக முதலமைச்சரும், ஆந்திர முதலமைச்சரும் 18.6.1989 அன்றும், 4.2.1990 அன்றும் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினார்கள். இந்த ஆலோசனையின் முடிவாக 31.3.1993-க்குள் சென்னை நகருக்குக் கிருஷ்ணா நீரினைக் கொண்டு வரவேண்டும் என முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதற்காகச் சென்னைக் குடிநீர் வாரியம், கிருஷ்ணா நீரினைச் சுத்திகரித்து விநியோகித்தல் மற்றும் கழிவு நீர் அகற்று வசதி ஆகிய பணிகளைச் செய்ய வேண்டும். அதற்காக இந்தப் பணிகளுக்கு முதற் கட்டமாகத் தமிழக அரசு கொள்கையளவில் ரூ.505.46 கோடிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 400 மி. லிட்டர் கூடுதலாகக் குடிநீர் வழங்குவதன் மூலம் மொத்த விநியோக அளவு 795 மி.லிட்டருக்கு உயர்த்தப்படும். இதனால் நபரொன்றுக்கு, நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் 100 லிட்டராக உயர்த்தப்படும். இந்தத் திட்டத்தினால் சென்னை நகருக்கு மட்டுமல்லாமல் அதற்கு அருகாமையில் இருக்கும் ஆவடி, அம்பத்தூர், போரூர், வளசரவாக்கம், இராமாபுரம், மதுரவாயில், நெற்குன்றம், ஆலந்தூர், பரங்கிமலை, கொட்டிவாக்கம், பள்ளிக்கரணை, புழுதிவாக்கம், நந்தம்பாக்கம், திருவொற்றியூர், மாதவரம், மணலி, கத்திவாக்கம் ஆகிய புறநகர்ப்பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க இயலும்.

இந்தத் திட்டப் பணிகளின் செலவுக்காக, நடைமுறையில் இருக்கும் உலக வங்கித் திட்டம், ''ஹட்கோ'' நிறுவனம் (HUDCO), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவற்றின் உதவிகளை அணுகியுள்ளது. தவிர, உலக வங்கித் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக ஒரு பெருந்தொகையைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்ட முன்னேற்றம்

அனைத்து உயர்மட்ட அதிகாரிகளுடன் அவ்வப் பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்ததினைச் சார்ந்த முக்கியப் பணிகளான, நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் செங் குன்றத்தில் அமைத்தல் (ரூ.30.632 கோடி) செங்குன்றத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் போரூருக்கு எடுத்துச் செல்ல முதன்மைக் குழாய்கள் பதித்தல் (ரூ.41.877 கோடி) சுத்திகரிக்கப்படாத நீரினைச் செங்குன்றத்திற்கு எடுத்துக் கொண்டு வருதல் (ரூ.10.946 கோடி) ஆகியவற்றிற்குத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

தெலுங்கு கங்கைக் குடிநீர்த் திட்டம் என்றழைக் கப்படும் இத்திட்டப் பணிகளை, சென்ற ஆண்டு தமிழ்ப்புத்தாண்டு நன்னாளில் (14.4.1990) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதுப்பொலிவுடன் தொடங்கி வைத் தார்கள். அப்போதைய மாண்புமிகு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்க, ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும் விழாவினில் பங்கேற்றனர்.

தெலுங்கு கங்கைக் குடிநீர்த் திட்டப்பணிகள் விழாவின் போதே, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதன் 75 ஆண்டுக்கால நிறைவு பவள விழாவும் (1914-90) சேர்த்துக் கொண் டாடப்பெற்றது.

கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், நாளொன் றுக்கு 90 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பெற்றதன் தொடக்க விழாவாகவும் —முப்பெரு விழாவாக, இந்த நல்விழா அமைந்தது.

**சமீபத்தில் முடிவுற்ற திட்டப்பணிகள்**

ஈக்காட்டுத்தாங்கல், மேற்குமாம்பலம், அசோக் நகருக்கான குடிநீர் விநியோகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. வில்லிவாக்கம். குளத்தூர், திருமங்கலம் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கப் பகுதிகள், எருக்கஞ்சேரி, கொடுங்கையூர், பள்ளிப்பட்டு, திருவான்மியூர் பகுதிகளில் குடிநீர் மேம்பாடு செய்யப்பட்டது, உலக வங்கித் திட்டத் தின் கீழ் பழைய விநியோகக் குழாய்கள் மாற்றி யமைக்கப்பட்டன. கடந்த இரண்டாண்டுகளில் 65 கி.மீ. நீளத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட விநி யோகக் குழாய்களைச் சேர்த்து மொத்தம் 190 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் பதிக்கப்பட்டன.

**சென்னைக்கு நீர் வழங்கும் தேக்கங்களில் நீர் ஆவியாகிப் போவதனால் ஏற்படும் நீரிழப்பினைத் தடுத்தல்**

குடிநீர்த் தேக்கங்களில் மொத்தத்தில் ஓராண்டில் 41 விழுக்காடு அளவு நீர் ஆவியாகி வீணாகிப் போவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனைத் தடுப்பதற்குப் புழலேரியில் இரசாயனக் கலவை களினால் தண்ணீர் ஆவியாவது தடுக்கப்பட்டு, சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு அதிகரிக்கப்பட்டது.

**1990-ஆம் ஆண்டில் வறட்சிப் பணிகளுக்காக அரசு ரூ.800.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகள் 30.11.90 வரை நிறைவேற்றப்பட்டன.**

| பணியின் பெயர் | செலவு (ரூ. இலட்சங்கள்) |
|---|---|
| 1. புதிய இந்தியா மார்க்-2 பம்புகள் 200 அமைத்தல் ... | 38.37 |
| 2. புதிய குடிநீர்த் தொட்டிகள் 300 அமைத்தல் ... | 24.10 |
| 3. குடிநீர் வழங்க 350 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் வாடகைக்கு அமர்த்துதல் ... | 651.87 |
| 4. செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து பம்புகள் மூலம் நீர் இறைத்தல் ... | 1.59 |
| 5. செங்குன்றம் ஏரியில் நீர் ஆவியாதலைத் தடுத்தல் ... | 14.10 |
| 6. நீர் நிரப்பும் இடங்களுக்கு அருகிலுள்ள சாலைகளைப் புதுப்பித்தல் ... | 30.00 |

**1989 மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் நகரில் நிறுவப் பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்களின் விவரம்:**

| விவரம் | 1989-ஆம் ஆண்டில் | 1990-ஆம் ஆண்டில் |
|---|---|---|
| 1. நிறுவப்பட்ட இந்தியா மார்க் ஆழ்துளை கிணறுகள் | 835 | 200 |
| 2. நிறுவப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் | 200 | 300 |
| 3. குடிநீர் வழங்க வாடகைக்கு அமர்த்தப்பட்ட | | |
| டாங்கர்கள் | 350 | 350 |
| டிராக்டர்கள் | 50 | 50 |

**கொடுங்கையூர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றும் நீரைத் திரும்பப் பயன்படுத்துதல்**

கொடுங்கையூரில் உள்ள இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இரண்டாவது கட்ட வடிகட்டி வாயிலாக வெளியேற்றப்படும் நீரினை வட சென்னையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் தற்பொழுது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நிலத்தடி நீரினை நகரின் குடிநீர் வழங்கலுக்குப் பயன்படுத்த ஏதுவாகும்.

**கழிவு நீரகற்று வசதி:**

சென்னை நகரத்தில் கழிவு நீரைச் சேகரித்து அப்புறப்படுத்துவதற்குச் சென்னை மாநகரம் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த மண்டலங்களில் சேரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு புல் வளர்ப்பிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டில் கொடுங்கையூரில் மண்டலம் 1,2-க்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு உபயோகத்தில் கொண்டு வரப்பட்டது. திருவான்மியூர், மேல்பட்டடை, பள்ளிப்பட்டு, பெரியார் நகர், அரும்பாக்கம் மேற்குப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வில்லிவாக்கம், கோட்டூர், எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கு மேம்படுத்தப்படும் குடிநீரின் மூலம் அதிகப்படியாக வரும் கழிவுநீரினை அப்புறப்படுத்துவதற்காகச் சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ள ரூ.505.46 கோடியில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு கழிவு நீரகற்று வசதித்திட்டத்தை மேம்படுத்துதல், கழிவு நீரேற்று நிலையங்களைப் புதுப்பித்து மாற்றி அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறனை அதிகப்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும். இதுவரை கழிவு நீரகற்று வசதி செய்யப்படாத 9 பஞ்சாயத்துகளுக்கு அந்த வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆதி ஆந்திர மக்களின் குடியிருப்புகளுக்குக் கழிவு நீரகற்று வசதி**

**சென்னை மாநகரில் ஆதி ஆந்திர மக்களும், வாழ்நிலையில் கீழே இருப்பவர்களும் வாழும் குடியிருப்புகளுக்கு, அடிப்படை வசதிகளில் ஒன்றான கழிவுநீரகற்றும் வசதி இதுவரை செய்யப்படாமலிருந்தது. இதனால், அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகினர். இக்குடியிருப்புகளுக்குக் கழிவுநீரகற்றும் வசதி செய்து தருவதற்கென அரசு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்தது. கழிவுநீர்க்குழாய் அமைப்பதற்காக வெட்டிய சாலையைச் சீரமைக்க சென்னை மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய பணிக்கட்டணமும், சென்னைக் குடிநீர் வாரியத்தால் இம்மாதிரிப் பணிகளுக்கென வசூலிக்கப்படும் பணிமேற்பார்வைக் கட்டணமும், குழாய் முதலிய பொருட்களுக்கான கட்டணமும் இல்லாமல், மொத்தம் 33 குடியிருப்புகளுக்கு, 15.62 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படுகின்றன.** மொத்தம் 33 குடியிருப்புகளில், 12 குடியிருப்புகளுக்கான கழிவு நீரகற்றும் பணிகள் முதற்கட்டமாக முடிவு பெற்று விட்டன. 1991 மார்ச் மாத இறுதிக்குள், மீதியுள்ள குடியிருப்புக்களுக்குமான பணி முடிவு பெற்றுவிடும்.

இப்போது சற்றொப்ப 43 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகர் இந் நூற்றாண்டு முடிவில் சுமார் 50 இலட்சமாகலாம். அரைக்கோடி மக்களுக்கு நாள்தோறும், ஒவ்வொருவருக்கும் நூறு லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குதல் நம் இலக்காகும். அதற்கு இப்போதிருந்தே நாளும் உழைத்துவரும் சென்னைக் குடிநீர் வாரியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ் அரும் பணிகள் ஆற்றிச் சாதித்து வருகிறது எனப் பெருமையுடன் குறிப்பிடலாம்.

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ தமிழகத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு இந்தியாவிலேயே அதிகச் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று தொழில் துறைச் செயலர் தெரிவித்தார் *(21.12.90)*.

★ கோவை மாவட்டத்தில் மூன்று மாத காலத்தில் 40 குடும்ப நல அறுவைச் சிகிச்சை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார் *(15.12.90)*

★ திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.308 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், தார்ச் சாலைகள் அமைத்தல், தொகுப்பு வீடுகள் (கான்கிரீட் வீடுகள்) கட்டுதல், குளங்களைச் சீரமைத்தல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், வங்கி மூலம் கடன் வழங்குதல் போன்ற வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது *(16.12.90)*

★ பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள மக்களுக்கு உதவும் விதத்தில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 70 ஆயிரம் வீட்டுமனைகள் மேம்படுத்தப்படும். இதேபோல குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சுமார் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 94,000 வீடுகள் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களில் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார் *(22.12.90)*.

# போற்றி வளர்க்கப்பட வேண்டிய கால்நடை மருத்துவ அறிவியல்

## கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு முதல்வர் வழங்கிய பட்டமளிப்பு விழா உரை.

**த**மிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு தமிழக அரசு கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் க.சந்திரசேகரன் அவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவில், பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. பொ.ரிச்சர்ட் மாசிலாமணி அவர்கள் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ் விழாவில்- மாணவ மாணவியருக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பட்டங்கள் வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரை விவரம் வருமாறு:

தமிழக ஆளுநர் - இப்பல்கலைக் கழக வேந்தர்
மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே!
மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர்-
இப்பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர்
டாக்டர் சந்திரசேகரன் அவர்களே!
பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களே!
ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே!
பேராசிரியப் பெருமக்களே!
மாணவச் செல்வங்களாம் அன்பு உடன்பிறப்புகளே!

நாட்டிலேயே முதலாவதாக அமையப் பெற்றிருக்கும் இக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மெத்தவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்கு இந்த நல்வாய்ப்பினை நல்கிய மேதகு வேந்தர் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவியல் வளர்ச்சி மனிதர்களுக்கு மட்டும் பயன்படவில்லை. நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பயன்படுகிறது. அந்த வகையில் கால்நடை மருத்துவ அறிவியல் மனித சமுதாயத்திற்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. எனவே, கால்நடை மருத்துவ அறிவியல் போற்றி வளர்க்க வேண்டியதாக உள்ளது.

நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ எழுபது விழுக்காட்டினர் கிராமப்பகுதியில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் வேளாண்மை, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவைகளை நம்பி வாழ்கின்றனர். பசுமைப் புரட்சியினால் நம்

''மனிதர்களைவிட, கால்நடைகள் ஒரு விதத்திலே மேல்! மனிதன் தனது ஆறாவது அறிவைப் பயன்படுத்திச் சில நேரங்களில் பொய் சொல்லிக் கோள் மூட்டுகிறான். ஆனால், கால்நடைகளுக்கு அந்த அறிவு இல்லாத காரணத்தாலும், பேச முடியாத காரணத்தாலும் அவை பொய் சொல்லிக் கோள் மூட்டுவதில்லை! அதனால் எனக்குக் கால்நடைகளை மிகவும் பிடிக்கும். கால்நடை மருத்துவ அறிவியலுக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று கருதி அதனை நான் நிறைவேற்றியதற்கு இதுவும் ஒரு காரணம்!''

—மாண்புமிகு முதல்வர் கலைஞர்





நாடு வேளாண்மை உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது எனினும், உணவுத் தேவை முழுமையாகத் தீர்க்கப்பட வில்லை. நல்ல உடல் வளத்திற்கும், வளர்ச்சிக்கும் பால், முட்டை, இறைச்சி, மீன் போன்றவை தேவைப்படுகின்றன. இதனை மனதிற் கொண்டுதான் தமிழக அரசு பள்ளிக் குழந்தைகளின் சத்துணவில் கோழி முட்டையினை வழங்குகின்றது. மக்கள் தொகைப் பெருக்கத் தால் உணவுப் பற்றாக்குறை ஒரு பெரும் சிக்கலாக உருவெடுத் துள்ளது. இதனைச் சமாளிக்க வேளாண் உற்பத்திப் பெருக்கம் மட்டுமல்லாது கால்நடை, கோழி, மீன் போன்ற பல்வேறு துறை களிலும் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட ஆவன செய்ய வேண்டும் என்பதில் ஐயமில்லை. உலக சுகாதார நிறுவனம் இதனை வெகுவாகச் சுட்டிக் காட்டுகிறது.

ஊரகப் பகுதியினைப் பொறுத்தவரையில் தொடர்ந்து வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு அளிப்பதில் கால்நடை வளர்ப்பும், கோழி வளர்ப்பும் பெரும்பங்கு கொள்கின்றன. பயிர்களுக்குத் தேவையான தொழு உரம், மண் வள மேம்பாடு, போக்குவரத்து போன்ற பல்வேறு பணிகளுக்கும் கால்நடைகள் பயன்படுகின்றன. மேலும் வேளாண் துணைப் பொருள்களைச் சத்துள்ள புரத உணவுப் பொருள்களாக மாற்றுவதோடு அதன் ஏற்றுமதி வாயிலாக அந்நியச் செலாவணி ஈட்டவும் வழிவகை செய்கின்றது. எனவே வெண்மை மற்றும் நீலப் புரட்சித் திட்டங்கள் மக்களுக்குச் சத்துள்ள உணவளிப்பதோடு நல்ல வருமானம் கிடைக்கவும் வழி செய்கின்றன.

தமிழ்நாடு ஒரு கோடியே 36 இலட்சம் மாடுகளையும், ஒரு கோடியே 8 இலட்சம் ஆடுகளையும், ஒரு கோடியே 83 இலட்சம் கோழிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் மூலம் ஆண்டுதோறும் 34 இலட்சம் டன் பால், 37 ஆயிரம் டன் இறைச்சி, இருநூற்றி நாற்பத்தாறு கோடியே பத்து இலட்சம் முட்டைகள் ஆகியவை உற்பத்தியாகின்றன. பரிந்துரையின்படி ஒருவரின் அன்றாட நுகர்வு அளவு 280 கிராம் பால், 40 கிராம் இறைச்சி, ஆண்டுக்கு 180 முட்டைகளாக இருக்க வேண்டும். ஆனால், நமது மாநிலத்தின் தனிநபர் நுகர்வுக்கு 169 கிராம் பால், 26 கிராம் இறைச்சி மற்றும் 44 முட்டைகள் என்ற அளவிலேயே இன்று கிடைக்கின்றன

இந்த நிலையில் பாலில் 40 விழுக்காடும், இறைச்சியில் 35 விழுக்காடும், முட்டையில் 75 விழுக்காடும் பற்றாக்குறையாக உள்ளது. வரும் ஆண்டுகளில் மக்கள் பெருக்கம் மற்றும் வாங்கும் சக்தி தொடர்பாக இந்தப் பற்றாக்குறை மிகக்கூடும்.

உணவு உற்பத்தியில் மீன் வளர்ப்பும் ஒரு முதன்மையான பங்கு பெறுகின்றது. தமிழகம் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், மீன்வளம் பெருக நல்லதொரு வாய்ப்புண்டு. மொத்தத்தில் 16 இலட்சம் எக்டேர் நன்னீர் மற்றும் உவர்நீர் கொண்டிருந்தும் தற்போதைய உற்பத்தி 3 இலட்சம் டன் மட்டுமே. ஆனால் தேவையோ ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது தேவையில் சுமார் 50 விழுக்காடு மட்டுமே கிடைக்கப் பெறுகிறது.

மேற்கண்ட புள்ளி விவரங்களைக் கருத்தில் கொள்ளும்போது கால்நடை வளர்ப்பு, மீன்வளம் ஆகியவற்றைப் பெருக்க வழி வகுக்கும் திட்ட முறைகளில் மேலும் கவனம் செலுத்த வேண்டும்

என்பது தெளிவாகின்றது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் தனிநபர் வருமானத்தை உயர்த்தவும் குறிப்பாக ஊரகப் பகுதி மக்களுக்குப் பயன்படும் முறையில், 1990-91-ஆம் ஆண்டில் 57 கோடி ரூபாய் செலவில் பல திட்டங்கள் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் முகமாக, கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், அயலினக் காளைகளின் உறைவிந்து நிலையம் அமைத்தல் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் தீவன வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாகப் புல் நாற்றுகள் மற்றும் விதைகள் அளிக்கப்பட்டுக் கால்நடை வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. இந்தியப் பால்வள நிறுவனத்தின் உதவியுடன், 68 கோடி ரூபாய் செலவில், பால் பெருக்குத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இறைச்சி உற்பத்தியையும், அதன் தரத்தையும் உயர்த்த அயலின செம்மறி ஆடுகள் மூலமாக நம் ஆட்டினங்களின் தரம் மேம்படுத்தப்படுகிறது.

கோழி வளர்ப்பினைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கோழியின மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசு நிறுவனங்கள் வாயிலாக உயர் ரகக் கோழிக்குஞ்சுகள், சமச்சீர் தீவனங்கள், மற்றும் விற்பனை வசதிகள் ஆகியவற்றை அளித்து நல்லதொரு சாதனையைப் படைத்துள்ளோம்.

நிலமற்ற ஏழைகள், சிறு மற்றும் குறு வேளாண் குடியினர், மலைவாழ் மக்கள், பழங்குடியினர் மற்றும் மகளிர் ஆகியோர்களுக்கு உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், கன்று வளர்ப்புத் திட்டம் முதலியன செயலாக்கப்பட்டு வருகின்றன. இவ்வளர்ச்சிப் பணிகள் வாயிலாக மானியம் வழங்குதல், செயல்முறை உத்திகள் மற்றும் கால்நடை நலம் பேணுதல் ஆகிய வசதிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற உழவர் குடி மக்களைப் பொருளாதார முன்னேற்றம் பெறச் செய்யும் என்பது திண்ணம்.

ஐரோப்பியப் பொருளாதார சமூக உதவியுடன் 13.67 கோடி ரூபாய் செலவில் ஆடுகளின் இறைச்சி உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டமானது செங்கல்பட்டு, வடார்க்காடு-அம்பேத்கர், தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

மீன் வளத்தைப் பொறுத்தமட்டில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதன் வாயிலாக அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டவும் நல்ல வாய்ப்புள்ளது. எனவேதான் தமிழக அரசு மீன் குஞ்சு உற்பத்தித் திட்டம், நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பு, நன்னீர் மற்றும் கடல்நீர் மீன் பெருக்குத் திட்டம், மீன் பதனிடுதல் மற்றும் விற்பனை வசதிகள் போன்ற பல்வேறு பகுதிகளுக்குத் திட்டங்கள் செயல்பட ஆவன செய்யப்பட்டுள்ளது. நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், ஏழை மீனவர்கள், தொழில் முனைவோர், தொழில் நுட்ப வல்லுநர் போன்ற பல்வேறு

"உவமைகளுக்குக் கூட கால்நடைகளைத் தான் நாம் விரும்பி அழைக்கிறோம். சோதனையான நேரத்திலும் அவன் சிங்கம்போல் சிலிர்த்து நின்றான் என்கிறோம். புலிபோல் உறுமினான் என்கிறோம். ஏறுபோல் நடந்தான் என்கிறோம். ஆனால், மனிதனை உவமையாக்கி எந்த மிருகத்தையும் போற்றிப் பாராட்டுவதில்லை; புகழ்வதுமில்லை!"

—மாண்புமிகு முதல்வர் கலைஞர்

**அடுத்த இதழில்...**

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- செங்கை அண்ணா, வடஆர்க்காடு- அம்பேத்கர், திருவண்ணா மலை-சம்புவராயர் மாவட்டங் களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச காங்கிரீட் வீடுகள் வழங்க மேற் கொண்ட நற்பணிப் பயணக் கட்டுரை- 'தமிழரசு' அடுத்த இதழில் (1.2.1991) இடம் பெறுகிறது!**

பிரிவினர் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இறால் வளர்ப்பை மேற்கொள்ள இவ்வரசு கடற்கரைப் பகுதியில் உள்ள 2,000 ஏக்கர் உவர்நீர்ப் பகுதியை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத் தக்கது. இம்மாநிலம் முழுவதிலும் உள்ள இறால் மீன் பண்ணை யாளருக்குக் குறித்த காலத்தில் பயிற்சி அளிப்பதன் வழியாக இப்பல்கலைக்கழகம் இவ்வரசின் செயலுக்குத் துணை புரிந்து வருகிறது.

இவ்வகைத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவை! ஆராய்ச்சிப் புதுமைகள் தேவை! தரமான இடுபொருள்கள் தேவை! அந்த வகையில் புதியதாக அமைந்த இப்பல்கலைக்கழகம், தொழில் அறிவும், ஆற்றலும் மிகுந்த பட்டதாரிகளைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இப்பல்கலைக்கழகம் புதிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறைகளைக் கண்டறிந்து அவற்றினைப் பண்ணையளவில் பயன்படுத்த ஆவன செய்து மக்களின் பொருளாதாரத் தரத்தினை உயர்த்தப் பாடுபட வேண்டும். எனவே, இப்பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளாகிய நீங்கள் அரசு மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்து எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்கள் கடமையினைச் செவ்வனே செயலாற்று வீர்கள் என நான் திடமாக நம்புகிறேன். இக்கல்வி நிலையத்தில் உங்களுக்கு முன் பயின்றவர்கள் நமது நாட்டிலும், வெளிநாடு களிலும் மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்துள்ளார்கள் என அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கல்லூரியின் ஆராய்ச்சிப் பணிகள் மாநிலத்தின் கால்நடை மேம்பாட்டிற்கு உதவியிருக்கின்றன. கலப்பினம் பற்றிய பரிந் துரைகள் கால்நடைகளின் பால் பெருக்கத்திற்குப் பெரிதும் துணை புரிந்து, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன அதுபோலவே, அயலின ஆடுகளின் சேர்க்கையினால் மேச்சேரி போன்ற நம் ஆடுகளின் இறைச்சி உற்பத்தி பெருகியிருக்கின்றது. ''சாண்டினோ'' எனப்படும் புதியரக ஆடு கம்பளி உற்பத்தியைப் பெருக்கத் தோற்று விக்கப்பட்டுள்ளது. புதியரகக் கோழியினம் நந்தனம் கோழி-1, நந்தனம் காடை-1 மற்றும் கறிக்கான முயல் வகைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் பாராட்டத்தக்க அம்சங்கள். மீன்வளத்துறையில் இப்பல்கலைக்கழகமானது இறால் வளர்ப்பு, இறால் குஞ்சு பொரிப்பகம், இறால் மீன் வளர்ப்பு, சிங்கி இறால் மீன் வளர்ப்பு, மெல்லுடலிகள் வளர்ப்பு, மேலும், பல்வேறு பயிற்சித் திட்டங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் போன்றவற்றையும் மேற்கொள்ளுகிறது. இவ்வகைத் திட்டங்கள் தமிழகத்தில் மீன் வளத்தினையும் வேலை வாய்ப்பினையும் பெருக்க உதவிடும். ஒருங் கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் மீன் பதனப் படுத்துதல் ஆகிய தொழில் நுட்பத் துறைகளில் தேவையறிந்து ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இதில் ஏற்படும் முன்னேற்றம் வரவேற்புக்குரியது. இத்தகு முயற்சிகளால் மேலும் பல புதிய இனங்களை உருவாக்க வேண்டும் என விழைகின்றேன்.

இப்பல்கலைக்கழகம் அண்மையில் பல நோய்களைக் கண்டறிந் துள்ளது என்பது பெருமைப்படுவதற்குரியதாகும். குறிப்பாகக் கோழிகளில் கம்போரோ நோய், ஆடுகளில் வெக்கை நோய் சார்ந்த புதிய வகைத் தொற்று நோய் மற்றும் நீலநாவு நோய், என்பனவாகும். அத்துடன் அவைகளுக்கான தடுப்பு முறைகளும்

பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதிநவீன தொழில் நுட்பங்கள், உறைவிந்து, கருமாற்றல், காளைகளைச் சோதிப்பதற்கான செல் நுண்ணியல், தீவன உபபொருளின் உணவுச் சத்தை அதிகரிக்கும் நுட்பங்கள் போன்றவை முறைப்படுத்தப் பட்டுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

எனினும், வெள்ளாடு மற்றும் அயலினப் பன்றி வளர்ப்புத் திட்டங்கள் அதிக முனைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும். மேய்ச்சல் நிலங்கள் குறைந்து வரும் நிலையில் வெள்ளாட்டினைக் கொட்டிலில் கட்டித் தீவனமளிக்கும் முறை முக்கியத்துவம் பெருகின்றது. சதுப்பு நிலப்பகுதியில் வாத்து வளர்ப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். தீவனத்திற்கான செலவு சுமார் 70 விழுக்காட்டிற்கு மேல் ஆவதால் தீவனங்கள் மற்றும் தீவனத் தொழில் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செம்மைப்படுத்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தேவைக்கேற்ப தீவன ஆலைகள் பெருகினாலும், தீவனத் தரக்கட்டுப்பாட்டு முறைகள் அமலில் இல்லாததால் அதற்குரிய தீவனத் தரக்கட்டுப்பாடு சட்டப்பூர்வமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

அண்மையில் அமைக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பத் துறையானது பல்வேறு புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம், புதிதாய்த் தோன்றும் நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள், வளர்ச்சி ஊக்கிகள் போன்றவைகள் உருவாக்கப்பட்டுக் கால்நடை மற்றும் மீன் வளம் பெருக்கிட ஆவன செய்ய வேண்டும். கால்நடைகளின் பெருவயிற்றில் உள்ள நுண்ணுயிர்களைப் பல்வேறு முறைகளில் நெறிப்படுத்தி உற்பத்தி நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஆராய்ச்சிக் கூடங்களில் பகுத்தறியப்படும் அறிவியல் கருத்துக்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பண்ணை அளவில் பயன்படுமாறு செயல்முறை விளக்கமளிக்க வேண்டும். இதனைச் செயல்படுத்துவதற்கு இன்னும் பல கால்நடைப் பயிற்சி நிலையங்களையும், செயல்விளக்க அமைப்புகளையும் உருவாக்க வேண்டும். பொதுமக்கள் தொடர்பு வாயில்களான பண்ணை வானொலி, தொலைக்காட்சி, பண்ணைப் புத்தக வெளியீடுகள் ஆகியவற்றைச் செம்மைப்படுத்த வேண்டும். பல்கலைக்கழக அறிவியல் வல்லுநர்கள், வேளாண் குடியினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களின் தேவையைப் பொறுத்து ஆராய்ச்சி மேற்கொண்டு செயல் முறைகளைச் சீர் செய்தல் வேண்டும். கால்நடை அறிவியல் தொடர்புள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற நலிவுற்றோர், கிராம இளைஞர்கள், பெண்கள் முதலானோரின் வாழ்க்கையை மேம்படுத்தும் முகமாகப் பல்கலைக்கழகப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய விளக்கங்களை மனதில் கொண்டு தமிழகத்தின் கால்நடை மருத்துவத் துறைக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தினை நாட்டிலேயே முதன் முறையாக அமைத்திட இந்த அரசு கடந்த ஆண்டு முன்வந்ததை அறிவீர்கள். குறிப்பாக இப்பல்கலைக்கழகத்தின் அனைத்து முயற்சிகளிலும் தாராள மனப்பான்மையுடன் மனமுவந்து ஒத்துழைப்பை நல்கி வரும் கால்நடை பராமரிப்புத்துறை, மீன் வளத்துறை மற்றும் இவை சார்ந்த பல்வேறு வாரியங்களையும் நினைத்து உவகை கொள்கிறேன். இத்தகைய செயல்களாலும் ஒத்துழைப்புகளாலும் கால்நடை மற்றும் மீன் உற்பத்தியைப் பெருக்கிக் கிராம மக்களின் வறுமையை அகற்றி உடல்வளம் பெறச் செய்ய இயலும். கால்நடை மருத்துவ இளம்பட்டதாரிகளாகிய நீங்கள் உங்கள் கல்வியறிவு மற்றும் தொழில் நுட்பத்திறன் ஆகியவற்றைச் செவ்வனே பயன்படுத்தி, பேருழைப்பு நல்கி, உங்கள் பணியில் முன்னேற்றம் கண்டு, உங்களை ஆளாக்கிய பல்கலைக் கழகத்திற்கும் இவ்வரசுக்கும் நல்ல பெயர் தேடித் தருவீர்கள் என்று கூறி, உங்கள் அனைவருக்கும் முன்கூட்டியே எனது பொங்கல் நல்வாழ்த்துக்களைக் கூறி அமைகின்றேன். நன்றி!

வணக்கம்.



# அரசியலுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும்!

## _மாண்புமிகு முதல்வர் கலைஞர் உரை

''நான் இங்கே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பெய்ரைக் குறிப்பிடும்போது அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று குறிப்பிடாமல், இந்திய நாட்டுத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று குறிப்பிட்டேன். 'அனைத்து இந்திய' என்று சொன்னால் உலகத்திலே ஐந்தாறு இந்தியாக்கள் போலவும், அவைகளையெல்லாம் இணைத்து அனைத்திந்தியா என்று சொல்வதைப் போலவும் இருக்கும்.

''அந்தக் காரணத்தினாலேதான் அகில இந்தியா என்று சொல்லுவதோ - அனைத்திந்தியா என்று சொல்லுவதோ பொருத்தமுடையதல்ல என்ற கருத்துக்கு அழுத்தம் தர, 'இந்திய நாட்டுத் தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்ற பெயர் இருக்க வேண்டும் என்பதை, எழுத்தாளர் சங்கம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இங்கே நான் அறிவித்திருக்கின்றேன்.

''ஒரு நிகழ்ச்சி! ஒரு தாய்; அவளுக்கு ஆறு ஏழு பிள்ளைகள்; ஒரு பிள்ளை வெளியூர் போயிருந்தான். வெளியூர் போயிருந்த பிள்ளை வீட்டிற்குத் திரும்பி வந்தான். சகோதரர்களெல்லாம் அவனை ஆவலோடு பார்த்தார்கள். அவன் வெளியூரிலேயிருந்து ஒரு காஞ்சிபுரம் பட்டுப் புடவை எடுத்து வந்திருந்தான். அதைத் தாயிடம் கொடுத்து ''அம்மா! நான் உனக்காக மிகுந்த கஷ்டப்பட்டுக் காசு பணம் சேர்த்து, இந்தக் காஞ்சிபுரம் சேலையை வாங்கி வந்திருக்கிறேன்'' என்று சொன்னான்.

''உடனே அவனது சகோதரர்களெல்லாம் அவனைப் பாராட்டி, அவனுக்கு ஒரு விழா எடுத்து ''தாயாருக்குக் காஞ்சிபுரம் சேலை வாங்கிக் கொண்டு வந்த மகனே வாழ்க!'' என்று வாழ்த்தினார்கள். அதைப் போலத்தான் இங்கே இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் எழுத்தோவியங்களை நாட்டுடைமை ஆக்கிய தற்கும், தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்யத் திட்டம் பல தீட்டிச் செயல்படுத்தி வருவதற்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு பாராட்டு விழா நடத்தியது.

31.12.1990 அன்று, சென்னையில் உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. வாசவன் தலைமை தாங்கினார்; பொதுச் செயலாளர் திரு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், சங்கத்தின் துணைத் தலைவர் திரு. மூவேந்தர் முத்து நன்றி கூறினார்.

மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள், இவ்விழாவில் கலந்து கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன், முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் வி.ஜி. சந்தோஷம், கவிஞர் மு. மேத்தா, கவிஞர் வைரமுத்து, திரு. ஜி. உமாபதி, திருமதி எஸ்தர் பாண்டியன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், 'கயல்' தினகரன், 'கவிக்கொண்டல்' மா. செங்குட்டுவன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, திரு. எஸ். துரைமுருகன் மற்றும் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், எழுத்தாளப் பெருமக்களும் பங்கேற்ற இவ்விழாவில் - எழுத் தாளர் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட நினைவுப் பரிசை ஏற்றுக் கொண்டு - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வாழ்த்துகளுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

''தாய்க்குக் காஞ்சிப் பட்டுச்சேலை வாங்கி வந்ததைப்போல - தமிழுக்கு உரிய பெருமையை அளிக்க வேண்டும் என்பதற்காக,நான் இருக்கின்ற பொறுப்பைப் பயன்படுத்திய ஒரு காரணத்துக் காக, அந்த வீட்டுப் பிள்ளைகளெல்லாம் விழா எடுத்ததைப் போல - நீங்கள் உங்களிலே ஒரு வனான எனக்கு - உங்கள் உடன்பிறப்பாகிய எனக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

''ஆனாலும் நம்முடைய தமிழர்கள் நிலை - தமிழகத்தின் நிலை, தமிழ் ஒரு அங்குலம் வளர் கிறது என்றாலே, தமிழுக்கு ஒரு அங்குல ஏற்றம் ஏற்படுகிறது என்றாலே நாம் அனைவரும் மெய் சிலிர்த்துப் போகிறோம். கண்களைக் குளமாக்கிக் கொண்டு ஆனந்தப்படுகிறோம். மகிழ்ச்சி வெள்ளத் தில் மிதக்கிறோம். என்ன காரணமென்றால், இத்தனை ஆண்டுக்காலமாகத் தமிழுக்கு விளை விக்கப்பட்ட தீங்குகளெல்லாம் மெல்ல மெல்ல அகன்று, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி போல் தமிழ் வெளிப்பட வேண்டும் என்று எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கின்ற ஒவ்வொரு கட்டத்திலும் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதைப் போன்ற மகிழ்ச்சியைத்தான் நாம் இன்றைக்குப் பெறுகிறோம்.

''அரசியல் - கட்சி இவைகளுக்கெல்லாம் அப் பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும். இந்தத் தமிழ்ச் சாதியை-தமிழ் இனத்தை எதிர்காலத்திலே அகராதி களில்தான் பார்க்க முடியும் என்ற நிலை உருவாகி விடக்கூடாது!

''எப்படி சில அதிசயப் பிராணிகள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து, அவைகளெல்லாம் மறைந்து, அறவே அற்றுப் போன சூழ்நிலையில், அவற்றின் படங்களை- அந்தப் பிராணிகள் அப்படி இருக்குமா? இப்படி இருக்குமா? என்று சித்திரம் வரைந்து காட்டி, அவற்றைப் பற்றி எழுதப்படுவதைப் போல்- இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுக் காலம் கழித்துத் தமிழர் என்னும் ஓர் இனம் இருந்தது என்றும், அதன் குணங்களைப் பற்றி அகராதியில்தான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும், அதற்கு அடையாளம் காட்ட முடியாது என்ற நிலை ஏற்படுமேயானால், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகுதானே - அப்போது நாம் இருக்கவா போகிறோம்; நம்மை யார் தூற்றப் போகிறார்கள் என்று கருதாமல், நாம் இல்லாவிட்டாலும் நம்முடைய கல்லறை இருக்கும் என்பதை ஞாப கத்தில் வைத்துக் கொண்டு, எதிர்காலச் சந்ததி யாராவது மிச்சமிருந்து அந்தக் கல்லறை மீது காறித் துப்பாமல் இருக்க வேண்டுமேயானால், இன்றைக்கே நாம் அந்த உணர்வுகளைப் பெற்றாக வேண்டும்.

''இன்று விழா நடைபெறுகின்ற இந்த வாய்ப்பும், பாராட்டும் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி அவற்றைப் பொதுவாக ஆக்கி, இனி யார் வேண்டுமானாலும் பாவேந்தரின் கவிதைகளை வெளியிடலாம் என்பதற்கு வழி வகுத்து, அவற்றை வெளியிடுவதற்குப் பதிப்புரிமை பெற்றிருந்த பதிப்பகத்தாரிடமெல்லாம் நானும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், எங்களுக்குத் துணையாக நண்பர் அவ்வை நடராசனும் இருந்து, எங்களுக்குப் பக்கத்துணையாக மன்னர் மன்னனும், அவருடைய குடும்பத்தாரும் பேசி, பதிப்பகத்தாருக்கு ஆகக்கூடிய செலவை, இழப்பை அரசு ஈடு செய்யும் என்று அந்தத் தொகையையும் தந்தோம். பாவேந்தருடைய புத்தகங்களைப் பதிப்பிக்கும் உரிமையை மன்னர் மன்னன் பேரம் பேசி விற்றாரா? என்றெல்லாம் சில பேர் கேட்கிறார்கள் - எழுதுகிறார்கள். நான் அதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்.

''ஒரு நல்ல காரியம் நடைபெற்றிருக்கிற நேரத்தில் அதற்கும்கூட அப்பழுக்குச் சொல்கின்றவர்கள் தமிழகத்திலே இருக்கின்றார்களே என்று எண்ணும்போது, நான் கவலைப்படுகிறேன். நாங்கள் மன்னர் மன்னனிடத்திலே பேரம் பேசி அவருடைய தந்தையினுடைய கவிதைகளைப் பெறவில்லை. அந்தக் கவிதைகளுக்குச் சொந்தக்காரர்கள், அதனை வெளியிடுகின்ற உரிமையைப் பெற்ற பதிப்பகத்தார். அவர்களிடத்திலேதான் நாங்கள் பேசி அந்தப் பணியை முடித்துக் கொண்டோம். ஆனால், மன்னர் மன்னன் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கும் எட்டு இலட்சம் ரூபாயை அரசின் சார்பில் வழங்கினோம் என்றால், அது பேரம் பேசி, கவிதைகளுக்காகத் தரப்பட்ட விலை அல்ல. பாரதிதாசனுடைய கவிதைகளுக்கு விலை தருவது என்றால் தமிழகத்தை மாத்திரம் அல்ல, இந்தத் தரணியையே எழுதி வைத்தாலும் கூட அதற்கு ஈடாகாது.

''ஒரு தமிழ்க் குடும்பத்திற்கு - தமிழ்த்துறைக்கு தன்மானப் புயலை - புரட்சியை விளைவித்த தந்தை பெரியாருக்கு, பேரறிஞர் அண்ணாவுக்கு உறுதுணையாக கவிதைப் படைக்கலன்களை உருவாக்கித் தந்த பாவேந்தருக்கு, அவருடைய குடும்பத்தாருக்குக் காட்ட வேண்டிய மரியாதையைத்தான் நாங்கள் காட்டினோமேயல்லாமல் - இந்த மரியாதையை நாங்கள் பரிவோடு காட்டிய காரணத்தினால் பரிவுத்தொகை என்ற அந்தத் தொகையை வழங்கினோமேயல்லாமல் வேறல்ல. அதற்காக நீங்கள் என்னைப் பாராட்டியிருக்கின்றீர்கள்.

''ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுடைய இதய சிம்மாசனத்திலே என்றைக்கும் நான் இருப்பேன். அதைவிடப் பெரிய சிம்மாசனம் கோட்டையிலே இருக்கின்ற சிம்மாசனம் என்று நான் கருதவில்லை. அங்கே நாங்கள் இருக்கின்ற காரணத்தால் சில கொள்கைகளை- கோட்பாடுகளை நிறைவேற்ற முடிகிற அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அவ்வளவு தான்!

''மலேசிய மண்ணிலிருந்து வந்து பாராட்டுகிறார் டத்தோ சாமிவேலு என்றால், நான் பெரும் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரன் அல்ல. பெரும் சீமான், கோமான் வீட்டிலே பிறந்தவன் அல்ல, ஒரு சாதாரண சாமான்யக் குடும்பத்திலே பிறந்தவன். எனக்குள்ள செல்வமெல்லாம், எனக்குள்ள பெருமையெல்லாம் உங்களைப் போன்ற ஏராளமான உடன் பிறப்புகளைப் பெற்றிருக்கின்றேன் என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை.

''எனவே, அந்தப் பெருமை கிடைத்தால் போதும். ஆட்சி என்பது உங்களுக்காக-மக்களுக்காக ஆற்ற வேண்டிய கடமைகளுக்காகக் கிடைக்கின்ற வாய்ப்பு; அந்த அளவிலேதான் அதைக் கருதுகின்றேன்.

''கடைத் தெருக்களில் விளம்பரப் பலகைகளில் தமிழ்தான் இருந்திட வேண்டும் என்று நாம் சொல்லுகின்ற அளவிற்குத் தமிழ்நாடு இருக்கின்றது. மலேசியாவிலே அந்நிலை இல்லை; வேறு எந்த நாட்டிலும் அந்த நிலை இல்லை; ஆனால் நம்முடைய நாட்டில் இருக்கிறது. நான் கீழக்கரையில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஐந்தாம் மாநாட்டிலே பேசும்போது கூட அதைக் குறிப்பிட்டேன். நாம் பாடுகின்ற தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட்டில் —

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்...'

என்று தொடங்குகின்ற அந்தப் பாடலில், தமிழைப் பார்த்து-உன் சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே என்ற அதனுடைய இறுதி அடிகளைப் பாடுகிறோம். மனோன்மணீயம் சுந்தரனார் எழுதியது - தமிழே உன் இளமையை வியந்து, உன் சீர் இளமையின் திறத்தை வியந்து, செயல்மறந்து, மெய்ம்மறந்து வாழ்த்துகிறோம் என்று சொன்னால் - அது எப்படிப் பொருள் தருகிறது என்றால், உன்னுடைய இளமையை நாங்கள் நேசிக்கின்றோம்; தமிழ்த்தாயே! ஆனால் உன்னை வளர்க்க வேண்டிய செயலை நாங்கள் மறந்துவிட்டோம் தமிழ்த்தாயே! அந்தச் செயலை மறந்துவிட்டு உன்னை வாழ்த்திக் கொண்டு இருக்கின்றோம். அந்தச் செயலை மறந்த தன்மை நீங்கி, இனி செயல்படுவோம் என்கிற சூளுரையை மேற்கொள்ள இந்த விழா பயன்படட்டும்.''



★ கிராமத்தைச் சீர்திருத்துவதென்றால், அஞ்சா நெஞ்சமும் ஒழுக்கமும் வேண்டும். கெட்டபெயர் ஏற்படுமே என்பதில் கவலை கொள்ளா மனப்பான்மை வேண்டும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1768/MS88/HTA

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




'இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1991' - முகப்பு